# வானவில்

# VAANAVIL

இதழ் 166 ஐப்பசி 2024

ISSUE 166 October 2024


# பலவீனமடைந்து செல்லும் சிறுபான்மை சமூகங்கள்!



**மு**தலில் ஒன்றைச் சொல்லிவிட வேண்டும். இலங்கையின் இன்றைய சூழல் பற்றி விவரிக்கும் இக்கட்டுரையில் சிறுபான்மை சமூகங்கள் எனக் குறிப்பிடப்படுபவை இலங்கையில் வாழ்கின்ற வடக்கு கிழக்கை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத்தில் வாழ்கின்ற இந்திய வம்சாவழித் தமிழர்கள் ஆகிய சிறுபான்மை இனத்தவர்களையும், மத அடிப்படையில் இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோரையுமே குறிக்கும்.

இவ்வருடம் (2024) செப்ரெம்பர் 21 ஆம் திகதி இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் இதுவரை காலமும் இல்லாதவகையில், பிரதான கட்சிகளைச் சேராத ஜே.வி.பி. கட்சியின் தலைவரான அநுர குமார திசாநாயக்க என்பவர் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்.

அவரது தெரிவைத் தொடர்ந்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, இவ்வருடம் நொவம்பர் 14 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கும் தேர்தல் நடாத்தப்படவுள்ளது.

அநுர ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை – அவர் போதிய வாக்குகளைப் பெறாத ஒரு சிறுபான்மை ஜனாதிபதியாக இருந்தபோதும் – இலங்கை வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். ஏனெனில், இலங்கை 1948 பெப்ருவரி 4 இல் சுதந்திரமடைந்த காலம் தொடக்கம், இலங்கையின் உயர்குடி மக்கள் எனக் கருதப்படும் கண்டிய சிங்கள சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய பிரதான கட்சிகளைச் சேர்ந்தவர்களே இலங்கையின் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து வந்துள்ளனர். அந்த வகையில் அநுர அந்தப் பாரம்பரியத்தை உடைத்துள்ளார்.

வழமை போலவே, இம்முறையும் ஜனாதிபதியாகத் தெரிவானவர் வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் வாழும் தமிழ் மக்களினதும், நாடு முழுவதும் பரந்து வாழும் முஸ்லீம் மக்களினதும், அதாவது நாட்டின் சிறுபான்மை இனங்களினது வாக்குகளைப் பெறுக் கொள்ளாமலே ஜனாதிபதியாகியுள்ளார். இதை ஒரு தற்செயல் நிகழ்ச்சியாகக் கொள்ள முடியாது.

ஏனெனில், இலங்கையின் அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், பெரும்பான்மை சிங்கள மக்கள் ஆட்சியில் இருப்பவர்கள் மீது அதிருப்தி அடைந்து, ஆட்சி மாற்றங்களைச் செய்த போதெல்லாம், சிறுபான்மைச் சமூகங்கள் அதில் பங்குபற்றாது எதிர்த் திசையிலேயே பயணித்துள்ளதை அவதானிக்கலாம்.

உதாரணமாக, சுதந்திர இலங்கையின் முதலாவது அரசை அமைத்த டி.எஸ்.சேனநாயக்கவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசு மீது அதிருப்தியுற்ற சிங்கள மக்கள், எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அமைத்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்து அக்கட்சியை 1956 தேர்தலில் அமோக வெற்றி பெறச் செய்தனர்.

அதேபோல, 1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் தலைமையில் அமைந்த, இடதுசாரிகளும் உள்ளடங்கிய கூட்டணியை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெறச் செய்தனர்.

1977 இல் நடைபெற்ற தேர்தலில் சிறீமாவோ தலைமையிலான அரசைத் தோற்கடித்து, ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை ஆறில் ஐந்து மடங்கு பெரும்பான்மையுடன் வெற்றி பெறச் செய்து அரியணை ஏற்றினர்.

1994 இல் சந்திரிக குமாரதுங்கவின் வெற்றியும் அவ்வாறே அமைந்தது.

அண்மையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலிலும் சிங்கள மக்கள் அவ்வாறானதொரு தீர்ப்பையே வழங்கியுள்ளனர். இலங்கை அரசியலில் பாரம்பரியமாக இருந்த ஆட்சியாளர்களைப் புறம் தள்ளிவிட்டு,

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…**

# அமெரிக்கத் தேர்தலும் மாற்றமடைந்து வரும் பூகோள நிலைமைகளும்

இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் ஆரம்பித்த பனிப்போர் காலம் 1990 ஆம் ஆண்டு வரை நீடித்தது. பின்னர் இருதுருவ உலக அரசியல் முடிவுக்கு வந்து, குறைந்தது 10 வருடங்களாவது உலகம் முழுமையாக ஒற்றைத் துருவ ஆளுகையின் கீழ் இருந்தது. 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து கடந்த இரண்டு தசாப்பதங்களாக இந்த ஒற்றைத் துருவத்திற்கு எதிரான சவால்கள் முளைவிட்டு இன்று விருட்சம் பெற்று நிற்கின்றது. ஐரோப்பா, மத்திய கிழக்கு ஆசியா மற்றும் கிழக்கு ஆசியாவைச் சுற்றி யுத்தங்கள் களைகட்டி நிற்கின்றன. அத்துடன் உலகெங்கிலும் பொருளாதாரம் முன்னெப்போதும் இல்லாத வகையில் நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கின்றது.

போர் என்பது முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த பகுதியாகும். உலகில் அதிகரித்து வரும் போர்களின் எண்ணிக்கையும் பொதுவான ஸ்திரமின்மையும் முதலாளித்துவ அமைப்புமுறையின் நெருக்கடியின் வெளிப்பாடுகள் மட்டுமே. போர்களின் மூல காரணமான முதலாளித்துவ அமைப்பையே அழிக்காமல், அவற்றை ஒழிக்க முடியும் என்று நினைப்பது கற்பனாவாதமாகும். எனவே, முழு உலகின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக இருக்கும் போர் வெறியர்களை வீழ்த்துவதற்கு வெகுஜன இயக்கமொன்றினைக் கட்டியமைப்பதும் அவசியமாகும்!

எதிர்வரும் நவம்பர் 5ம் திகதி அமெரிக்காவின் 60வது ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் எவர் வெற்றி பெற்றாலும், இப்போதுள்ள மோதல்கள் மற்றும் கொந்தளிப்பு நிலைமைகளில் பாரிய மாற்றங்கள் எதுவும் நிகழப்போவது இல்லை. இதற்கு உதாரணமாக ரஷ்ய–உக்ரைன் யுத்தம் மற்றும் மத்திய கிழக்கு யுத்தங்கள் தொடர்பான வேட்பாளர்களது நிலைப்பாடுகளைக் கூறலாம்.

குடியரசுக்கட்சி வேட்பாளாரான டொனால்ட் ட்ரம்ப் தான் வெற்றி பெற்றால் ரஷ்ய–உக்ரைன் யுத்தத்தை 24 மணி நேரத்தில் நிறுத்துவேன் எனக் கூறுகிறார். அதேவேளையில் இஸ்ரேல், ஈரானின் அணு நிலையங்கள் மீது தாக்குதல் நிகழ்த்த வேண்டுமென்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். மறுபக்கத்தில், காஸா மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் தங்கு தடையின்றி சென்றடைய வேண்டுமென வற்புறுத்தும் ஜனநாயகக்கட்சி வேட்பாளரும் தற்போதைய துணை ஜனாதிபதியுமாகிய கமலா ஹரிஸ், இஸ்ரேல் தன்னை பாதுகாப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றதெனவும் கூறுகிறார்.

அமெரிக்காவில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு குடியரசுக்கட்சியினரும் ஜனநாயகக்கட்சியினரும் நடத்தும் தொலைக்காட்சி விவாதங்களில் ஒருவரையொருவர் கடித்துக்குதறும் எதிரிகள் போன்று செயற்படுவதால், பலருக்கும் அமெரிக்காவில் அரசியல் ஸ்திரமின்மை நிலவுவதாகத் தென்படுகின்றது. அத்துடன் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடன் வென்றதை ஏற்க மறுத்து, ட்ரம்ப் தனது குடியரசுக்கட்சி அதரவாளர்களை ஏவிவிட்டு அமெரிக்க நாடாளுமன்றக் கட்டிடத்தைத் தாக்கியதும், அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற பலவிதமான நீதிமன்ற வழக்குகளைப் பார்த்தாலும் அமெரிக்காவின் இருகட்சி ஆட்சி முறை சவாலுக்கு உள்ளாகியிருப்பதைப் போன்றும் தோற்றமளிக்கலாம். ஆனாலும் உலகில் அமெரிக்காவை ஏகாதிபத்தியமாக நிலை நிறுத்துவதற்கான அயலுறவுக் (யுத்தவெறிக்) கொள்கைகளில் இருகட்சிகளும் ஒருமித்த கருத்தையே கொண்டுள்ளன என்பதைக் கவனிக்க வேண்டும்.

உள்நாட்டு அரசியலைப் பொறுத்தவரையில், ட்ரம்பைப் போன்று இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஹரிஸ் குடியேற்றவாதிகளுக்கு எதிரான கடுமையான நிலைப்பாடு கொண்டவர் கிடையாது. அதேநேரத்தில் கருக்கலைப்பை தீர்மானிப்பது பெண்கள் என்கிறார் ஹரிஸ். ஆனால் ட்ரம்ப் மத அடிப்படையில் கருக்கலைப்பை முற்றாக எதிர்க்கின்றார்.

இரண்டாம் உலக யுத்தத்தில் ஐரோப்பாவில் யூதர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு பரிகாரமாகவே பலஸ்தீனியர்களின் மண்ணில் இஸ்ரேல் உருவாக்கப்பட்டதாக கூறப்பட்டாலும், உண்மை அதுவல்ல. யூதர்கள் மீது மிகுந்த அனுதாபம் இருந்திருந்தால், அவர்கள் அதிகமாக வாழ்ந்த, பெரிய நிலப்பரப்பைக் கொண்ட ஐரோப்பாவில் அல்லது வட அமெரிக்காவில் யூதர்களுக்கென்று ஒரு நாட்டினை உருவாக்கியிருக்கலாம். மத்திய கிழக்கிலுள்ள எண்ணெய் வளங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காகவே சிறிய நிலப்பரப்பைக் கொண்ட பலஸ்தீனம் பிரிக்கப்பட்டு அங்கு இஸ்ரேல் நிறுவப்பட்டது.

பலஸ்தீனர்கள் பூர்வீகமாக வாழ்ந்த மண்ணில் இஸ்ரேல் உருவாக்கப்பட்டதை, பலஸ்தீனர்களும் உலகில் இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. இதன் விளைவாக, மத்திய கிழக்கில் இஸ்ரேலியர்களுக்கு எதிரான மோதல்கள் வெடித்தன. இதுவரையில் இஸ்ரேல் எல்லா யுத்தங்களிலும் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் உதவியுடன் வெற்றிவாகை சூடி, பலஸ்தீனியர்களின் நிலங்களையும் சிரியா மற்றும் லெபனான் நாட்டு நிலப்பரப்புகளையும் ஆக்கிரமித்து வைத்துள்ளது.

2022 ஆம் ஆண்டு ரஷ்யப்படைகள் உக்ரைனின் கிழக்குப் பகுதியை ஆக்கிரமித்த பின்னரே ரஷ்ய–உக்ரைன் யுத்தம் ஆரம்பித்ததாக கோர்ப்பரேட் ஊடகங்கள் சித்தரிக்கின்றன. ஆனால் அதற்கு 8 வருடங்களுக்கு முன்னதாகவே யுத்தம் ஆரம்பித்துவிட்டது. ஒரு காலத்தில் சோவியத் ரஷ்யாவின் அங்கமாக இருந்து, அதன் செல்வாக்கிற்குட்பட்டிருந்து, ரஷ்யாவுடன் 2300 கிலோ மீற்றர் நீளமான எல்லையைப் பகிரும் உக்ரைனை, நேட்டோ அமைப்பில் சேர்த்து தங்கள் அணியில் கொண்டு வருவதற்கான முயற்சியில் அமெரிக்கா இறங்கியது. அதற்கு முட்டுக்கட்டையாக இருந்த, ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட உக்ரைன் அரசாங்கம் 2014 ஆம் ஆண்டு கவிழ்க்கப்பட்டது. உடனேயே அங்கே யுத்தம் மூண்டது. அன்று தொடங்கிய யுத்தம் இப்போது, உக்ரைன் நிலப்பரப்பில் ரஷ்யாவிற்கும் நேட்டோவிற்கும் இடையிலான நிழல் யுத்தமாக விரிவடைந்துள்ளது.

இராணுவ பலத்தின் துணையுடன் உலகிலுள்ள எரிபொருள் வளங்களையும், டொலர் மற்றும் தங்கள் வங்கிகள் மூலமாக சர்வதேச நிதிச்சந்தையையும் அமெரிக்கா கட்டுப்படுத்துகின்றது. அத்தோடு நின்றுவிடாது மின்சக்திக்கு அவசியமான சிலிக்கன் (Silicon), லித்தியம் (Lithium) மூலகங்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயல்கின்றது. இந்த அமெரிக்க ஒற்றைத்துருவ உலகத்தை முறியடிக்கும் வகையில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து பிரிக்ஸ் (BRICS) என்ற அமைப்பை உருவாக்கி உலகம் பல்துருவத்தை நோக்கி நகர்கின்றது. எனவே அடுத்துவரும் 4 வருடங்களில் உலகின் அதிகாரச் சமநிலையில் ஏற்படவிருக்கும் மாற்றத்தை அமெரிக்கத் தேர்தலில் எவர் வெற்றிபெற்றாலும் தடுத்து நிறுத்த முடியாது.


***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.*

# தடுமாறும் இந்திய கம்யூனிஸ்ட்டுகள்!

இலங்கையில் நடந்து முடிந்த 9ஆவது ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி. மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பனவற்றின் தலைவர் அனுர குமார திசாநாயக்க வெற்றியீட்டியதைத் தொடர்ந்து, பல நாடுகளின் தலைவர்கள் சம்பிரதாயபூர்வமாக வாழ்த்துச் செய்தி அனுப்பி வருகின்றனர். இதில் வியப்பதற்கு எதுவும் இல்லை.

ஆனால், வியப்பதற்கு உரிய விடயம் என்னவென்றால், இந்தியாவின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அனுரவின் வெற்றிக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியிருப்பதுதான்! ஜே.வி.பி. கட்சியை ஒரு இடதுசாரி கட்சி என அவர்கள் கருதித்தான் அனுரவிற்கு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

இந்தியாவின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டுமின்றி, உலக நாடுகளில் உள்ள வேறு சில இடதுசாரி கட்சிகளுக்கும் இந்தக் குழப்பம் இருக்கிறது. அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

ஜே.வி.பி. ஆரம்பம் முதல் தன்னை ஒரு சோசலிச கட்சி என்று கூறிக் கொண்டதுடன், சிவப்பு நிறக் கொடிகளையும், மார்க்ஸ், ஏங்கல்ஸ், சே குவேரா ஆகியோரின் உருவப் படங்களையும், அரிவாள் ~ சுத்தியல் போன்ற கம்யூனிஸ்ட் சின்னங்களையும் தமது பிரச்சாரங்களின் போது பயன்படுத்தி வந்ததால் பலருக்கு ஜே.வி.பி. ஒரு புரட்சிகரமான இடதுசாரி கட்சி என்ற மாயை ஏற்பட்டுவிட்டது.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்தியா இலங்கைக்கு மிக அண்மையில் உள்ள ஒரு நாடாக இருந்த போதிலும், அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இந்தக் குழப்பம் ஏற்பட்டிருப்பதுதான். அதிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இந்தக் குழப்பம் இன்று நேற்று ஏற்பட்ட குழப்பம் அல்ல.

ஜே.வி.பி. அதன் ஸ்தாபக தலைவர் ரோகண விஜேவீர தலைமையில் 1971 ஏப்ரல் 5 ஆம் திகதி அப்போதைய இலங்கை அரசுக்கு எதிராக தனது முதலாவது ஆயுதக் கிளர்ச்சியை நடத்தியது. இதில் குறிப்பிட வேண்டிய முக்கிய விடயமென்னவெனில், அப்போது



இலங்கையில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க அவர்களைப் பிரதமராக கொண்டு, அவரது சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜ கட்சி மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பனவற்றின் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு கூட்டரசாங்கம் பதவியில் இருந்தது. அந்த அரசுக்கெதிராகத்தான் ஜே.வி.பி. ஆயுதக் கிளர்ச்சியில் இறங்கியது.

***விவேக்***

அதுவும் அந்த அரசாங்கம் 1970 பொதுத் தேர்தலில் மக்களின் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெற்றிருந்தது. அப்படியான ஒரு அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு வருடம் மட்டுமே ஆன நிலையில், மக்களின் ஆதரவைப் இழந்திருக்காத ஒரு நிலையில், தற்கொலை முயற்சி போல ஜே.வி.பி. தலைமை ஆயுதக் கிளர்ச்சியில் இறங்கி பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைப் பலிக்கடாவாக்கியது.

தோழர் நா.சண்முகதாசன் தலைமையிலான இலங்கை புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து சென்றே ரோகண விஜேவீர 1965இல் ஜே.வி.பி. இயக்கத்தை உருவாக்கினார். ஜே.வி.பி. ஒரு குட்டி முதலாளித்துவ சிங்கள இனவாத இயக்கம் என்பதை ஆரம்பத்தில் இருந்தே சண்முகதாசன் தலைமையிலான புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி மிகத் தெளிவாக எடுத்துக் கூறி வந்துள்ளது.

இருந்தும், ஜே.வி.பி. 1971 எப்ரல் ஆயுதக் கிளர்ச்சியை மேற்கொண்ட காலத்தில் கேரளாவில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த "சோசியல் சயன்ரிஸ்ட்" (Social Scientist) என்ற ஆங்கில சஞ்சிகையில் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத், ஜே.வி.பி. நடத்திய ஆயுதக் கிளர்ச்சியை ஒரு முற்போக்கான நடவடிக்கை என முற்றிலும் தவறாக விளக்கியிருந்தார்.

அந்தத் தவறை இலங்கையின் புரட்சிகர கம்யூனிஸ்ட்டுகள் சுட்டிக்காட்டியும், இந்திய கம்யூனிஸ்ட்டுகள் தமது தவறைத் திருத்திக் கொண்டதாகத் தெரியவில்லை. அதன் பின்னரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் (CPI-M) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் (CPI) தமது மாநாடுகளுக்கு ஜே.வி.பி. கட்சியின் பிரதிநிதிகளையும் அழைத்து வந்துள்ளன. சில ஆண்டுகளுக்கு முன்னர் கூட, ஜே.வி.பி. யாழ்ப்பாணத்தில் நடத்திய மேதின கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இந்திய தொழிற்சங்க மையத்தின் (சி.ஐ.டி.யு) தமிழ்நாடு மாநிலத் தலைவர் அ.சவுந்தராசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஜே.வி.பி. ஒரு இடதுசாரி கட்சி என நம்புபவர்கள் அவர்களது வாய்ச் சவடால்களை விட்டுவிட்டு, அவர்களது கடந்த கால நடவடிக்கைகள் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால்:

ஜே.வி.பி. ஆரம்பம் முதல் தன்னை ஒரு சிங்கள பேரினவாத கட்சியாக நிரூபித்து வந்ததைக் காண முடியும். இலங்கையில் தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அத்தனை நடவடிக்கைகளையும் ஜே.வி.பி. மூர்க்கமாக எதிர்த்து வந்திருக்கிறது.

இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக 1987 இல் இந்திய ~ இலங்கை உடன்படிக்கை ஊடாக கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தத்தை எதிர்த்தே அந்தக் காலகட்டத்தில் ஜே.வி.பி. தனது இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியை மேற்கொண்டது.

இலங்கையின் சகல அரசுகளும் மேற்கொண்ட இனவாத யுத்தத்தை ஜே.வி.பி. எந்தவிதமான நிபந்தனையும் இன்றி ஆதரித்து வந்துள்ளது.

**தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...**

# 50 ஆண்டு கால பெருமிதத்தையும் சிறப்பையும் கொண்டாடும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்!




இலங்கையின் வட மாகாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அப்பிராந்தியத்தின் கலாச்சார, சமூக மற்றும் அரசியல் நிலப்பரப்புடன் ஆழமாக பின்னிப்பிணைந்த ஒரு வளமானதும் சிக்கலானதுமான வரலாற்றைக் கொண்டுள்ளது.

1974 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது வளாகமாக ‘இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம்’ என்ற பெயரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது. கலை மற்றும் விஞ்ஞானத் துறைகளை முதன்மைப்படுத்தி, இந்தக் கல்வி நிறுவனம் ஒரு சில பீடங்களுடனும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களுடனுமே தொடங்கியது.

யாழ்ப்பாண வளாகத்தில் இணைந்த எமது முதலாவது அணி மாணவர்கள் அரசாங்கத்தை வற்புறுத்தியதன் விளைவாக, அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க இந்த வளாகத்தை நிறுவுவது குறித்து பரிசீலிக்க வேண்டியதாயிற்று!

1974 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இளங்கலை பட்டதாரிகளை இலங்கையிலுள்ள வளாகங்களில் உள்வாங்க வேண்டியிருந்தது. மொரட்டுவ பல்கலைக்கழகம் (அப்போது கட்டுபெத்தை வளாகம்) கணிதப் பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்ட சுமார் 130 மாணவர்களுக்கு, அங்கு இருந்த இடவசதிக் குறைபாடுகள் காரணமாக, அவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதற்கு அடுத்த ஆண்டு வரை காத்திருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

பெரும்பான்மையான மாணவர்கள் விரக்தியடைந்தார்கள்!. அப்போது, முக்கியமாக கொழும்பு ஆனந்தா கல்லூரியைச் சேர்ந்த சிறு மாணவர் குழுவொன்று ஒன்றுகூடி, கட்டுபெத்தை வளாகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய மாணவர்களை, பல்கலைக்கழக செனட் மாளிகைக்கு (இப்போது அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு) கலந்துரையாடல் ஒன்றுக்கு பத்திரிகை விளம்பரத்தின் மூலம் அழைப்பு விடுத்தனர். இந்த விளம்பரத்திற்கு யாழ்ப்பாண மாணவர்கள் உட்பட பெரும்பாலான மாணவர்கள் செவிமடுத்தனர். பின்னர் அதே ஆண்டில் எங்களுக்கு பல்கலைக்கழக நுழைவுக்கான அனுமதியை வழங்க கொள்கை வகுப்பாளர்களை செல்வாக்கு செலுத்துவதற்கான மூலோபாயம் ஒன்றினை நாங்கள் உருவாக்க வேண்டியிருந்தது.

அந்த நேரத்தில் ஒரேயொரு பல்கலைக்கழகம் மாத்திரமே இருந்ததால், எமது கோரிக்கையை ஆதரித்த காலஞ்சென்ற எல்.எச்.சுமணதாச (L.H. Sumanadasa) என்ற ஒரேயொரு உபவேந்தர் மாத்திரமே இருந்தார், ஆனால் அவரால் வெற்றிபெற முடியவில்லை. பின்னர் எமது பிரதேசத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான வசுதேவ நாணயக்கார மற்றும் அமரர் சரத் முத்தெட்டுகம ஆகியோரின் ஊடாக நாம் எமது கோரிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தோம்.

கலாநிதி கிங்ஸ்லி பேர்னாட்
(Dr. Kingsley Bernard)

பல சந்திப்புகள் மற்றும் கலந்துரையாடல்களின் பின்னர், அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க யாழ்ப்பாணத்தில் உள்ள சில பாடசாலைக் கட்டிடங்களைப் பயன்படுத்தி, யாழ்ப்பாணத்தில் ஒரு வளாகத்தைத் திறக்க முடிவு செய்தார். வட்டுக்கோட்டையில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றிலிருந்து கட்டிடங்களைக் கையகப்படுத்துவதில் அரசாங்கம் வெற்றி கண்டது.

பல்கலைகழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட அணி மாணவர்களில் 95 வீதமானோர் யாழ்ப்பாணம் செல்ல சம்மதித்தனர். முதலாவது தலைவராக காலஞ்சென்ற பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் 1974 ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி அப்போதைய பிரதமர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாண வளாகத்தின் முன்னோடி அணி மாணவர்களாக மாறும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது!

### புதிய சூழலை எதிர்கொள்ள தயார்

அக்காலத்தில் புகழ்பெற்ற ‘இரவுத் தபால் ரயில்’ (கொழும்பு – யாழ்ப்பாணம்) என்பதற்கு அப்பால், எனக்கு யாழ்ப்பாணத்தைத் தெரியாது! பல்கலைக்கழக பட்டங்களைப் பெற ஆர்வமாக இருந்த பெரும்பாலான எங்கள் சக மாணவர்களுக்கு யாழ்ப்பாணக் குடாநாடு என்பது ‘ஒரு தரிசு நிலம், பனை மரங்கள் பதிக்கப்பட்ட கவனிப்பாரற்ற மணல் நிலப்பரப்பு’ என்பதைத் தவிர வேறெதுவும் தெரியாது. இருப்பினும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளவர்களின் கலாச்சாரம் மற்றும் வளமான கல்விப் பாரம்பரியம், தொழில், விடாமுயற்சி, கடின உழைப்பு மனப்பான்மை பற்றி நான் அதிகம் அறிந்திருந்தேன். புதிய சூழலை எதிர்கொள்ள நான் தயாராக இருந்தேன். தெற்கு என்று அழைக்கப்படும் நாங்கள் அனைவரும் வடக்கின் விழுமியங்களையும் அமைப்புகளையும் ஏற்றுக்கொள்ளவதற்கு அதிக காலம் எடுக்கவில்லை.

அவிசாவளையிலிருந்து எனது

தந்தையும் தாயும் பாடசாலை ஆசிரியர்களாக, வார்த்தையின் பரந்த அர்த்தத்தில் கூறுவதானால் 'கல்வியை' மேம்படுத்துவதற்காக வாழ்ந்து அயராது உழைத்த ஒரு பின்னணியில் இருந்து நான் வந்தேன். இனம் மற்றும் மதம் பற்றிய பயங்களின்றி குழந்தைப் பருவத்திலேயே நான் சிந்தனையில் முதிர்ச்சி கொண்டவனாக ஊட்டி வளர்க்கப்பட்டதை என் உள்ளத்தில் வைத்துப் பேணியிருந்தேன்.

தென்னிலங்கையைச் சேர்ந்த ஒரு சிலராகிய நாங்கள் ஆரம்பத்தில் சந்தேகம், அவநம்பிக்கை மற்றும் அச்சத்துடன் எமது மாணவர்களால் மட்டுமன்றி, வீதியில் நின்ற மனிதராலும் வரவேற்கப்பட்டோம்!. நாங்கள் 'வெளியிடத்தவர்கள்' ஆனால் அங்கீகாரம், நம்பிக்கை மற்றும் எங்கள் விழுமியங்களுக்கான மரியாதை கொண்ட ஆரோக்கியமான சூழலில் ஒருவராக உணர்வதற்கு எங்களுக்கு அதிக காலம் எடுக்கவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளவர்களின் வாழ்க்கை முறையைப் பற்றிப் பேசும்போது, அந்த கடின உழைப்பாளிகளின் உளவியலைப் பாராட்டாமல் இருப்பது கடினம். அதிகாலை 4.30 மணியளவில், துண்டு நிலத்தைக்குரிய மனிதர், அவரது தரைக்கு தண்ணீர் பாய்ச்ச கடினமாக உழைத்ததைக் காணக் கிடைத்தது. காலை 6.00 மணிக்கெல்லாம் எனது ஆசிரியரை, விரிவுரையாளரை அல்லது பேராசிரியரைக் கூட அணுகி பாடப்பயிற்சிகளுக்கான விளக்கங்களை பெற்றுக்கொள்ள என்னால் பெற முடிந்தது.

எங்கள் 'பல்கலைக்கழக' வாழ்க்கை தொடர்ந்ததால், விஞ்ஞான மாணவர் சங்கத்தின் தலைவர் பதவிக்கு போட்டியிடுமாறு எனது சக மாணவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டனர். நான் அப்பதவிக்கு ஏகமனதாக நியமிக்கப்பட்டேன்! பின்னர் மாணவர் பேரவையின் தலைவர் பதவிக்கு போட்டியிட என்னைத் தூண்டிய அந்த நாளும் வந்தது.

இன நல்லிணக்கத்தில் எவருக்கேனும் சந்தேகம் இருக்குமாயின், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முதலாவது தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டேன் என்பதே நிலைத்து நிற்கும் சாட்சியாகும். இந்தத் தேர்தல் இரண்டாவது கல்வி ஆண்டில் நடந்தது. சுவாரசியங்கள் நிறைந்த என்னுடைய கல்வி வாழ்க்கையின் இறுதி ஆண்டு வரை, மாணவர் பேரவையின் தலைவராக நான் தொடர்ந்தேன். இது நாங்கள் அனுபவித்த தோழமையுணர்ச்சி மற்றும் ஒற்றுமையின் அத்தியாயங்களை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இன நல்லிணக்கம் பற்றி பேசுபவர்கள் பலர் உள்ளனர். சமூகங்களின் 'உரிமைகள்' பற்றி ஊடகங்களில் வெளியான கருத்துக்கள் பல உள்ளன. பல்வேறு சிறுபான்மை சமூகங்களுடன் வாழ்ந்து கற்றுக்கொண்ட எனது தனிப்பட்ட அனுபவம் என்னவென்றால், அவர்கள் எதிர்பார்ப்பது பல 'உரிமைகளை' அல்ல, மாறாக விளையாட்டு மைதானத்தில் ஒரு சமமான போட்டியாளர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதையே விரும்புகிறார்கள்.

1979 இல் யாழ்ப்பாண வளாகம் இலங்கைப் பல்கலைக்கழகத்திடமிருந்து தன்னாட்சியைப் பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக உருவாகியது.

1980களில், யாழ் பல்கலைக்கழகம் அதன் கல்வி வழங்கல்களை தொடர்ந்து விரிவுபடுத்தினார்கள்.

1980களின் ஆரம்பத்தில் தொடங்கிய உள்நாட்டுப் போரின் (1980–2009) தாக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆழமானதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது. மோதல் வலயத்தில் அமைந்திருந்த பல்கலைக்கழகம், கல்வி நடவடிக்கைகளுக்கான இடையூறுகள், உள்கட்டமைப்பு சேதம் மற்றும் மாணவர்களினதும் மற்றும் ஆசிரியர்களினதும் இடப்பெயர்வு உட்பட பல சவால்களை எதிர்கொண்டது.

இந்த சவால்கள் இருந்தபோதிலும், பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்க பெருமிதத்தை வெளிப்படுத்தும் வகையில், வட மாகாணத்தில் கல்வி மற்றும் ஆராய்ச்சியின் முக்கிய மையமாக இருந்து வந்தது.

2009 இல் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து, போருக்குப் பின்னரான மீட்சி மற்றும் அபிவிருத்திக்குமான காலகட்டமொன்றில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை புனரமைப்பதும் அபிவிருத்தி செய்வதும் என்பதை ஆரம்பமாகக் கொண்டு தொடங்கியது. சேதமடைந்த உள்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்பவும், கல்வித் திட்டங்களை விரிவுபடுத்தவும், வளாக வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு என்ற மற்றொரு துறையில் பல்கலைக்கழகம் அதன் ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகின்றது. குறிப்பாக, பிராந்தியத்தின் தேவைகளுடன் தொடர்புடைய விவசாயம், மருத்துவம், மற்றும் சமூக அறிவியல் போன்ற துறைகள்.

என் அனுபவத்திற்கு வருகிறேன். இறுதியாக, யாழ்ப்பாணத்து மக்கள், புகழ்பெற்ற கல்வியாளர்கள் முதல் எளிய சுறுசுறுப்பான விவசாயிகள் வரை, எங்களை ஒரே இனத்து மனிதர்களாக ஏற்றுக்கொண்டனர். குடாநாட்டில் பிறந்து வளர்ந்தவர்களைப் போலவே, அவர்கள் எங்களையும் மனிதாபிமானத்துடன் ஏற்றுக்கொண்டனர். பிளவுபடுத்துவதை விட சிந்தனையிலும் செயலிலும் அவர்கள் ஒன்றிணைய முயன்றனர் என்பது தெளிவாகத் தெரிந்தது.

1873 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திததி, மதிப்பிற்குரிய பெஞ்சமின் டிஸ்ரேலி (Benjamin Disraeli) பொதுமக்கள் சபையில் (House of Commons) 'ஒரு பல்கலைக்கழகம் என்பது ஒளி, சுதந்திரம் மற்றும் கற்றல் ஆகியவற்றின் இடமாக இருக்க வேண்டும்' என்று கூறியதாக நான் அறிந்திருக்கிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பல்வேறு துறைகளில் மிகச் சிறந்த நிபுணர்களை உருவாக்கியுள்ளதுடன் இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கிலும் தமது சேவைகளை வழங்கி வருகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பணம் செய்யும் இக்கட்டுரையை உணர்வுப்பூர்வமாக நிறைவு செய்ய, என் வாழ்க்கைத் துணைவியை, என் அன்பு மனைவியை அங்கே கண்டேன் என்பதையும் குறிப்பிடுவதற்கு மறக்கக் கூடாது. அவரும் எங்கள் சக மாணவராக இருந்தார்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் செழிப்பும் முன்னேற்றமும் கொண்டு மேலும் கல்வியில் சிறந்து விளங்க நான் வாழ்த்துகிறேன்!

*(இந்தக் கட்டுரையாளர் கலாநிதி கிங்ஸ்லி பேர்னாட், இலங்கையில் பல்வேறு பதவிகளில் பணியாற்றிய யாழ் பல்கலைக்கழக முதலாவது அணி மாணவர்களில் ஒருவராவார். அவர் பல்தேசிய கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், வர்த்தக சபைகள் மற்றும் சேவை நிறுவனங்கள் உட்பட அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்துள்ளார். குறிப்பாக லயன்ஸ் இன்டர்நேஷனல் – 306பீ2 (Lions International-306B2) இலங்கை மாவட்ட ஆளுநராக 2009–2010 காலப்பகுதியில் நியமிக்கப்பட்டுள்ளார். கலாநிதி பேர்னாட் இலங்கை ஏற்றுமதி சபையின் தற்போதைய தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாவார்)*

இக்கட்டுரை Daily Mirror பத்திரிகையில் 27.09.2024 அன்று வெளியானது.

**தமிழில்: வானவில்**

# சீன மக்கள் விடுதலையின் 75 ஆண்டுகள்

இவ்வருடம் (2024) ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதி முதல் சீன மக்கள் தமது "மக்கள் சீன குடியரசு" என்ற புதிய சீனத்தின் 75ஆவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாக கொண்டாடி வருகின்றனர். இன்றைய சோசலிச சீனாவின் தோற்றம் 1949 ஒக்ரோபர் 1ஆம் திகதி நிகழ்ந்தது. அதன் தோற்றத்தை சீன மக்களின் மாபெரும் தலைவர் மாஓ சேதுங் அவர்கள் 1949 ஒக்ரோபர் 1ஆம் திகதி உலகத்தின் முன் பிரகடனம் செய்தார்.

சீனாவின் வரலாறு உலகிலுள்ள மற்றைய நாடுகளின் வரலாறை விட சற்று வித்தியாசமானது. இன்றைய உலக நாடுகளில் சீனாவுக்கு மட்டுமே 5,000 ஆண்டு வரலாறு எழுத்தில் உள்ளது. மனித குலம் முதலில் வாழத் தொடங்கிய நாடுகளில் சீனமும் ஒன்று என்பதை தற்பொழுது அந்நாட்டில் மேற்கொண்டு வரும் அகழ்வாராய்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

சீனாவுக்கு தொன்மையான ஒரு வரலாறும் நாகரீகமும் இருந்த போதிலும், அது பல நூறு ஆண்டுகளாக குறை வளர்ச்சி நிலையிலேயே இருந்து வந்துள்ளது. ஒரு பக்கத்தில் இயற்கையின் பல்வகைப்பட்ட சீற்றங்கள் அந்நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக இருந்தன. இன்னொரு பக்கம் அந்நாட்டில் மிகவும் பிற்போக்கான நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு முறையைக் கட்டிக்காத்த கொடுங்கோல் மன்னர்களும் யுத்தப் பிரபுக்களும் அந்த நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தனர்.

இந்த உள்நாட்டுக் காரணிகளை விட, காலத்துக்காலம் அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் சீனாவின் பல பகுதிகளை ஆக்கிரமித்து தமக்குள் கூறுபோட்டு வைத்திருந்தனர். இந்த அந்நிய ஆக்கிரமிப்பாளர்களில் பல விதமான மேற்கத்தைய ஏகாதிபத்திய நாடுகள் உள்ளடங்கி இருந்தன. இறுதியாக சீனாவுக்கு அருகில் உள்ள யப்பான் சீனாவின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டது. இந்த அந்நிய ஆக்கிரமிப்பு சக்திகள் சீனாவின் வளர்ச்சிக்கு குறுக்காக நின்ற இன்னொரு சக்திகளாகும்.




சீனா பரப்பளவில் ஏறத்தாழ மேற்கு ஐரோப்பா அளவு விஸ்தீரணம் கொண்டது. அது முழுக்க முழுக்க பின்தங்கிய விவசாய நாடாகவே இருந்தது. பெரும்பாலான விவசாயிகள் நிலமற்ற அடிமை விவசாய கூலிகளாகவே இருந்தனர்.

இந்த அடிமை முறைக்கு எதிராக காலத்துக்காலம் பல கிளர்ச்சிகள் நடைபெற்ற போதிலும், அவை எல்லாமே மன்னர்களாலும் நிலப்பிரபுக்களாலும் கொடூரமாக ஒடுக்கப்பட்டன. இருந்தாலும் 1911 ஆம் ஆண்டு கோமின்டாங் கட்சியின் தலைவராக இருந்த டாக்டர் சன் யாட் சன் அவர்களால் மிகப்பெரும் புரட்சி ஒன்று முன்னெடுக்கப்பட்டு வரலாற்றில் முதல் தடவையாக வெற்றி பெற்றது. இது சீன வரலாற்றில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியாக கணிக்கப்படுகிறது.

**சுப்பராயன்**

சன் யாட் சன் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒத்துழைப்பு, விவசாயிகள் தொழிலாளர்களுக்கு ஆதரவு, சோவியத் யூனியனுடன் நட்புறவு என்ற மூன்று முற்போக்கு கொள்கைகளைப் பின்பற்றினார். 1921 யூலை 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சி, ஒரு பக்கத்தில் ஒடுக்கப்பட்ட வர்க்க மக்களுக்காகப் போராடிக்கொண்டு, மறுபக்கத்தில் சன் யாட் சன் முன்னெடுத்த தேசியக் கொள்கைகளையும் ஆதரித்து வந்தது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் சன் யாட் சன் மரணிக்க கோமின்டாங் கட்சியின் தலைமைக்கு சியாங் கே ஸேக் என்ற தீவிர வலதுசாரி வந்தார். அவர் மக்களுக்கு எதிராகவும், ஏகாதிபத்திய சக்திகளுக்கு ஆதரவாகவும் செயல்பட்டதுடன், கம்யூனிஸ்ட்டுகளுடன் முரண்பட்டு அவர்களுக்கு எதிராக உள்நாட்டு யுத்தத்தையும் ஆரம்பித்தார். இந்த உள்நாட்டு மோதல் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு 1935இல் யப்பானிய ஏகாதிபத்தியம் சீனாவின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டது.

இந்த நிலைமையில், தமக்கிடையிலான மோதலை நிறுத்திக் கொண்டு, தேசத்தைப் பாதுகாப்பதற்காக யப்பானை ஐக்கியப்பட்டு எதிர்த்துப் போராட முன்வருமாறு சியாங்கே ஸேக்கிடம் சீன கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வலியுறுத்திய போதிலும், அவர் அதனை ஏற்க மறுத்ததால், வேறு வழியின்றி சீன கம்யூனிஸ்ட் கட்சி ஒரு புறம் யப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிக்கொண்டு, மறுபுறம் சியாங்கே ஸேக் அரசையும் எதிர்த்துப் போராட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உறுதியான தொடர் போராட்டம் காரணமாக 1945 இல் யப்பான் தோற்கடிக்கப்பட்டு சீனாவை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இருந்தபோதும், சியாங்கே ஸேக்கின் கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிரான போர்

நிறுத்தப்படவில்லை. அதன் காரணமாக 1945 முதல் 1949 வரை சியாங்கே ஷேக் அரசுக்கும் கம்யூனிஸ்ட்டுகளுக்கும் இடையில் நேரடிப் போர் நடைபெற்றது. இந்தப் போரில் அமெரிக்கா உட்பட சகல மேற்கத்தைய நாடுகளும் சியாங் அரசுக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்தன.

இருந்தபோதும், கம்யூனிஸ்ட் கட்சி மக்களைத் திரட்டி போராட்டத்தை உறுதியாக முன்னெடுத்ததால், இறுதியாக சியாங்கின் 90 இலட்சம் படைகளும் அழிக்கப்பட்டு, அவன் தோற்கடிக்கப்பட்டு, நாட்டை விட்டுத் தப்பியோடி தாய்வான் தீவில் அடைக்கலம் புகுந்து அங்கு அமெரிக்காவின் ஆதரவுடன் பொம்மை அரசொன்றை அமைத்துக் கொண்டான். (சியாங் இறந்த பின்னரும் கூட அமெரிக்கா இன்றுவரை தாய்வான் தீவில் உள்ள பிற்போக்கு பொம்மை அரசை ஆதரித்து வருவதுடன், அந்த அரசை சீனாவுக்கு எதிராகத் தூண்டியும் வருகின்றது)

1949 ஒக்ரோபர் 1ஆம் திகதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் உதயமான புதிய சீனா, மாஓ தலைமையில் சோசலிசப் புரட்சியையும் நிர்மாணத்தையும் முன்னெடுத்து, ஒரு பலம் வாய்ந்த சோசலிச நாடாக உருவாகியது. அடிப்படை சோசலிச கட்டுமானத்தை உருவாக்கிக் கொண்ட சீனா, அதன் பின்னர் பலவிதமான அரசியல் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டு, இன்று ஒரு நவீன சோசலிச நாடாக வளர்ச்சி பெற்றுள்ளது.

இன்றைய சீனா, உலகின் முதல்தரமான பொருளாதார – இராணுவ சக்தியாக உள்ள அமெரிக்காவுக்கு அடுத்த இரண்டாவது சக்தியாக உலக அரங்கில் வளர்ச்சி பெற்றுள்ளது. விரைவில் அது அமெரிக்காவை கடந்து முன்னேறிவிடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இன்றைய உலகின் முழுப் பொருளாதாரத்திலும் சீனாவின் பங்கு 30 சத வீதம் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

சீனா தனது 140 கோடி மக்கள் தொகை முழுவதையும் வறுமைக் கோட்டுக்கு வெளியே வெற்றிகரமாக கொண்டு வந்துள்ளது.

இன்றைய உலகில், உலக சமாதானத்தினதும், வளர்ச்சியினதும் அச்சாணியாக சீனா திகழ்கின்றது. அதன் காரணமாக, அமெரிக்கா தலைமையிலான உலக ஏகாதிபத்திய அமைப்புக்கு எதிரான உலகின் அடக்கியொடுக்கப்பட்ட நாடுகளினதும் மக்களினதும் பரந்துபட்ட ஐக்கிய முன்னணிக்கு சீனாவே இன்று தலைமைச் சக்தியாகத் திகழ்கின்றது.

ஒரு காலத்தில் “ஆசியாவின் நோயாளி” என மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளால் எள்ளி நகையாடப்பட்ட சீனா, இன்று “உலகின் அதிசயம்” என்ற நிலைக்கு வளர்ந்துள்ளது.

19ஆம் 20ஆம் நூற்றாண்டுகள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் நூற்றாண்டுகளாக இருந்தன. அதற்கு அடுத்து வந்த நூற்றாண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நூற்றாண்டாக இருந்தது. இனி வரப்போகும் நூற்றாண்டு ஏகாதிபத்தியங்கள் இல்லாத ஒரு நூற்றாண்டாக, சீனாவினதும் ஏனைய உலக நாடுகளதும் நூற்றாண்டாக இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

# நம்பிக்கையான நண்பராக திகழ்வோம் : ஈரானுக்கு சீனா ஆதரவு

ஈரான் எல்லைக்கு வெளியில் இருந்து தாக்குதலோ ஆபத்தோ ஏற்பட்டால் ஈரானுக்கு ஆதரவாகவும் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் சீன அரசு உறுதியாக இருக்கும் என சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீ (Wang Yi) உறுதி கொடுத்துள்ளார்

ஈரானின் இறையாண்மை, பாதுகாப்பு, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றை பாதுகாப்பதில் சீனா தொடர்ந்து ஆதரவளிக்கும். எப்போதும் ஈரானின் நம்பிக்கையான நண்பனாக சீனா திகழும் என அவர் பேசியதாக சீனா வெளியுறவுத்துறை அமைச்சகம் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்ற பொது அவை கூட்டத்திற்கு இடையே ஈரானின் புதிய ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது இதனை அவர் குறிப்பிட்டுள்ளார். லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பு மீது இஸ்ரேல் கொலைவெறித் தாக்குதலை தொடங்கியுள்ள நிலையில் சீனாவின் உறுதியான ஈரான் ஆதரவு கருத்து வெளிப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தின் மீதான போரை தொடர்ந்து கடந்த சில மாதங்களுக்கு முன் ஈரான் இஸ்ரேலுக்கு இடையே போர் பதற்றம் அதிகரித்த போதும் ஈரானுக்கான தனது ஆதரவை சீனா உறுதியாக வெளிப்படுத்தியுள்ளது.

ஈரான் மீது விதிக்கப்படும் எந்தவொரு வகையிலான பொருளாதாரத் தடைகளையும் சீனா எதிர்ப்பதாகவும் வாங் யீ சுட்டிக்காட்டியுள்ளார்.

23.09.2024 முதல் ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தளபதிகள், 150 குழந்தைகள், 200 பெண்கள் உட்பட 2100 க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களை இஸ்ரேல் இராணுவம் படுகொலை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈரான் விவகாரத்தில் வழக்கம் போல அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஒரே அணியில் நிற்கின்றன. அத்துடன் இந்த அணி இஸ்ரேலின் ஈரான் மீதான அத்துமீறல்களையும் கண்டிப்பதில்லை.

## மக்களைத் திரட்டித் போராட்டத்திற்கு தயார்படுத்துவது பற்றி வியட்நாமியப் புரட்சித்தலைவர் தோழர் ஹோசிமின் கூறியது:

ஓர் ஊழியர் ஒரு கிராமத்துக்கு அனுப்பப்பட்டிருந்தார். கொஞ்சக்காலம் கழித்து அவர் திரும்பிவந்து ஹோசிமின்னிடம் “அந்த கிராமத்து மக்களைத் திரட்டுவதற்கு வழியே இல்லை. அவர்கள் அனைவரும் புத்தமதப் பழமைவாதிகள். அவர்கள் நாள் முழுக்க தியானம் செய்து கொண்டேயிருக்கிறார்கள்” என்றார். ஹோசிமின் இதைக் கேட்டுவிட்டு அந்த ஊழியரிடம் “நீ திரும்பவும் அந்த கிராமத்துக்கே போ. நீயும் அவர்களோடு தியானம் செய். அவர்களோடு நீரில் மீனைப் போல இரு. அவர்களை தியானத்திலிருந்து மீட்டுவிடலாம்” என்று கூறினார்.

சுரண்டப்பட்டுக் கிடக்கும் மக்களைத் திரட்டுவதற்கு, ஊழியர் கூறிய பிரச்சனைக்கு ஹோசிமின் கூறியது அருமையான பாடமாகும். உன்னிடமுள்ள புரட்சிகர நெருப்பை உனது கடைசி நாள் வரை கொடு என்பதே இதன் பொருளாகும்.

## தோழர் சீத்தாராம் யெச்சூரி நினைவாக:

# நாட்டின் மகத்தான கம்யூனிஸ்ட்டுகளில் ஒருவர்!



இந்தியாவின் சக்தி வாய்ந்த கம்யூனிஸ்ட் கட்சி, அதன் தலைமையாளரான 72 வயது நிறைந்த சீத்தாராம் யெச்சூரி (Sitaram Yechury) அவர்களை இழந்துள்ளது. அவர் சுவாசக் கோளாறு காரணமாக 2024 செப்ரெம்பர் 12ஆம் திகதி புது டெல்லியில் காலமானார்.

எதிர்க்கட்சித் தலைவரும், இந்திய தேசிய காங்கிரசின் தலைவருமான ராகுல் காந்தி (Rahul Gandhi), "எமது நாட்டைப் பற்றி ஆழமான புரந்துணர்வுடைய பாதுகாவலர்" என அவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) யின் பொதுச்செயலாளரான யெச்சூரி ஒரு அரிதான யதார்த்தபூர்வமான இந்திய கம்யூனிஸ்ட்.

யெச்சூரியின் அரசியல் வாழ்வை எடுத்துக்கொண்டால், அவர் ஒருபோதும் எந்தவிதமான அரசாங்க பதவியை வகிக்காதபோதும், அவரது வாழ்வு நடவடிக்கைகளால் நிறைந்தது. பிரதமர் இந்திராகாந்தி எதேச்சாதிகரமான 'அவசரகாலநிலை'யை நாட்டில் பிரகடனம் செய்தபோது அவர் அதை எதிர்த்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரபலமான மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதி பாசு அவர்களை பிரதமர் ஆக்குவதற்கு முன்மொழியப்பட்ட போது, அதை அவர் தடுத்தார்.

பிரதமர் மன்மோகன் சிங்கின் அரசாங்கம் அமெரிக்காவுடன் ஒரு அணுவாயுத விடயம் சம்பந்தமான ஒப்பந்தம் செய்து கொண்டபோது, அவரும், அவருடைய கட்சியும் மன்மோகன் சிங் அரசாங்கத்துக்கான ஆதரவை விலக்கிக் கொண்டனர்.

**சரிதா எஸ்.பாலன்**

யெச்சூரி 1952 ஓகஸ்டில் தெலுங்கு பேசும் குடும்பம் ஒன்றில் சென்னையில் பிறந்தார். அவருடைய தகப்பனார் சர்வேஸ்வர் சோமயாயூலா யெச்சூரி (Sarveshwar Somayajula Yechury) ஒரு பொறியாளர். தாயார் கல்பகம் (Kalpakam) ஒரு அரச உத்தியோகத்தர்.

யெச்சூரி ஆரம்பக் கல்வியை ஆந்திராவில் உள்ள ஹைதராபாத்தில் மேற்கொண்ட போதும், தகப்பனார் தொழில் நிமித்தம் இடங்கள் மாறிய போது இவரும் பல பாடசாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 1970இல் இவர் இந்தியா முழுவதுக்குமான முதல்தர மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் பின்னர், தனது குடும்பப் பெயர் இந்தியாவின் அதியுயர் ஆளும் சாதியான பிராமண குலத்தைக் குறித்ததால், சீத்தாரம ராவோ (Sitarama Rao) என்றிருந்த பெயரை மாற்றிக்கொண்டார்.

கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமை தாங்கப்பட்ட, தெலுங்கானா இயக்கம் (Teladgana Movement) என்ற விவசாயிகளின் ஆயுதக் கிளர்ச்சி காரணமாக அவரது குடும்பம் 1968இல் ஹைதராபாத்தில் இருந்து வெளியேறியது.

அவர் டெல்லியில் உள்ள President's Estate School என்ற பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார். அதன் பின்னர் புகழ்பெற்ற சென். ஸ்ரீபன் கல்லூரியில் (St.Stephen's College) பொருளாதாரம் படித்தார். பின்னர் இடதுசாரி அரசியலுக்கு பெயர் பெற்ற ஜவகர்லால் நேரு (Jawaharlal Nerhu University) பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அங்கு அவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர் அமைப்பான இந்திய மாணவர் சம்மேளனத்துக்கு (Students Federation of India) பொறுப்பாக இருந்தார். அந்தக் காலகட்டத்தில் (1975 யூன் முதல் 1977 மார்ச் வரை) ஜனநாயகத்தையும், சிவில் உரிமைகளையும் பாதித்த அவசரகாலச் சட்டத்தை பிரதமர் இந்திரா காந்தி பிரகடனம் செய்தார். யெச்சூரி அதை எதிர்த்ததால் கைது செய்யப்பட்டார்.

இந்திரா காந்தி 1977 பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த போதும், ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் வேந்தராகத் (Chancellor) தொடர்ந்தார். யெச்சூரி இந்திரா காந்தியின் இல்லத்துக்கு ஒரு ஊர்வலத்தை நடத்திச் சென்று, அவரது முன்னிலையிலேயே அவரால் ஏற்பட்ட துன்பங்களை வாசித்துக்காட்டி, அவரை வேந்தர் பதவியில் இருந்து விலகும்படி வலியுறுத்தினார். (அது சம்பந்தமான புகைப்படம், அவர் இறந்த பின்பு சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுள்ளது)

யெச்சூரி 1975இல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். அவர் பின்னர் 1985இல் கட்சியின் மத்திய குழுவுக்கும் (Central Committee), 1989இல் மத்திய செயற்குழுவுக்கும் (Central Secretariat), 1992இல் அரசியல் தலைமைக்குழுவுக்கும் (Polit Bureau) தெரிவானார். 2015இல் கட்சியின் மிக உயர் பதவியான பொதுச் செயலாளராகத் (General Secretary) தெரிவு செய்யப்பட்டார். நெருக்கடியான நேரங்களில் கட்சி எடுத்த முக்கியமான அரசியல் தீர்மானங்களின் போது முக்கிய

பங்கு வகித்தார். அவரது அரசியல் நடவடிக்கைகளின் களமாக டெல்லி திகழ்ந்தது.

இந்திய கம்யூனிச இயக்கத்தைப் பொறுத்தவரை, ஒருவர் நடைமுறைச் செயற்பாட்டாளராகவும், புத்திஜீவியாக இருப்பதும் அரிதானது. புத்திஜீவிக் கம்யூனிஸ்ட்டுகளிடமிருந்து நீண்ட கட்டுரைகள், புத்தகங்கள், கட்சி ஊழியர்களுக்கான சொற்பொழிவுகள் என்பன எதிர்பார்க்கப்படுவது வழமை. நடைமுறைத் தலைவர்கள் சுற்றிலுமுள்ள விடயங்களை கூர்மையாக அவதானிப்பவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவார்கள். யெச்சூரி இரண்டு வகையான ஆற்றலும் உள்ளவராக இருந்தார்.

இருப்பினும் இந்திய இடதுசாரித்தனத்தின் 'வரலாற்று அசட்டுத்தனம்' யெச்சூரியையும் அவரது தோழர்களையும் தொற்றிக் கொண்டது. 1996இல் ஜோதி பாசுவை இந்தியாவின் முதலாவது மார்க்சிஸ்ட் பிரதமராக்கும் வகையில் இடதுசாரி மற்றும் மத்திய இடதுசாரி அமைப்புகளின் ஐக்கிய முன்னணி விடுத்த அழைப்பை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நான்கில் மூன்று பங்கினரான மத்திய குழு உறுப்பினர்கள் எதிர்த்தார்கள். பாசுவும் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த ஹர்கிசன் சிங் சுர்ஜித்தும் (Harkishan Singh Surjeet) அந்த அழைப்புக்குச் சாதகமாக இருந்தார்கள்.

யெச்சூரி தனது அனுபவங்களில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டதுடன், எதிர்கால அசட்டுத்தனங்களையும் தவிர்த்துக் கொண்டார். வலதுசாரி பாரதிய ஜனதா கட்சிக்கு எதிரான கூட்டு அரசியலுக்கு ஒரு பாலமாக அவர் செயல்பட்டார்.

தத்துவார்த்த பலத்தைப் பொறுத்தளவில் யெச்சூரி ஒரு வாழும் உதாரணமாக இருந்தார். இருப்பினும் அவர் பாரதிய ஜனதாவை எதிர்த்த, அதே நேரத்தில் கருத்து முரண்பாடான கட்சிகளுக்கிடையில் இருந்த கருத்து முரண்பாட்டு எல்லைகளைத் தகர்ப்பதில் வெற்றி கண்டார்.

உதாரணமாக, இந்தி பேசும் மாநிலங்களை சேர்ந்த முலாயம் சிங் மற்றும் லாலு பிரசாத் ஆகிய இருவருக்கும் அவர் நண்பராக இருந்தார். இருப்பினும், தனது மதச்சார்பற்ற, தாராள ஜனநாயக, உறுதியான மார்க்சிச – லெனினிச நிலைப்பாடுகளிலிருந்து வழுவாமலே அவர் இதைச் செயல்படுத்தினார். காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி அவரைப்பற்றிக் குறிப்பிடும் போது, "2004 – 2008 காலகட்டத்தின் போது நாம் நெருக்கமாகச் செயல்பட்டு உருவாக்கிய நட்புறவு அவரது இறுதிக்காலம் வரை தொடர்ந்தது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட்டுகள் பிடிவாதக்காரர்கள் என்ற பொதுவான கருத்துண்டு. ஆனால் யெச்சூரியின் கள்ளம் கபடமற்ற புன்னகை தொடர்புகளைப் பேணுவதற்கு ஒரு கொடையாகவிருந்தது. அவரது ஆற்றல்கள் காங்கிரஸ் கட்சியையும், அந்தக் கட்சிக்கு எதிராகத் தோன்றிய பிராந்தியக் கட்சிகளையும் ஒரு பொது மேடைக்குக் கொண்டு வருவதற்குத் துணையாக இருந்தன. அவருடைய பொதுக்கூட்டங்கள் பெருந்தொகையான கட்சி ஊழியர்களை கவரக்கூடியதாக இருந்தது.

1990களில் இருந்து யெச்சூரி கூட்டு அரசியலின் முன்னோடியாகத் திகழ்ந்து வந்தார். அவரது தலைமைத்துவத்தின் கீழ் மார்க்சிஸட் கம்யூனிஸ்ட் கட்சி, அப்போது வெறுப்புக்குள்ளாகியிருந்த காங்கிரஸ் கட்சியுடன் சில பிரதேசங்களில் பரீட்சார்த்தமாக கூட்டுச் சேர்ந்து செயல்பட்டது. அவர் காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஒருவரான பா.சிதம்பரத்துடன் இணைந்து உருவாக்கிய ஐக்கிய முன்னணிக்கான குறைந்தபட்ச வேலைத்திட்டத்தின் அடிப்படையில்தான் 1996இல் ஐக்கிய கூட்டரசாங்கம் செயல்பட்டது. அதன் அடிப்படையிலேயே காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் அரசாங்கமும் 2004 – 2009 காலகட்டத்தில் செயல்பட்டது. அந்த அரசாங்கத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி "வெளியிலிருந்து ஆதரவு" கொடுத்தது.

யெச்சூரி, சோனியா காந்தியுடனும், அவரது மகன் ராகுலுடனும் நல்ல உறவுகளைப் பேணி வந்தார். காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜெய்ராம் ரமேஸ் (Jairam Ramesh), யெச்சூரியை பற்றிக் குறிப்பிடும் போது, 'ஒன்றில் இரண்டு' (two – in one) என அவரது பொதுச் செயலாளர் பதவியை வர்ணித்துள்ளார். (அதாவது, காங்கிரஸ் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி இரண்டுக்கும் பொதுச் செயலாளர் என்ற அர்த்தத்தில்) சில நேரங்களில் அவரது செல்வாக்கு அவரது சொந்தக் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியை விட காங்கிரஸ் கட்சியில் கூடுதலாக இருந்துள்ளது.

தாயுடனும் மகனுடனுமான அவரது உறவு, கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் பத்துக்கு மேற்பட்ட கட்சிகளை நரேந்திர மோடியின் அரசாங்கத்துக்கு எதிரான கூட்டணிக்கு கொண்டுவர உதவியுள்ளது. இந்தக் கூட்டணி "இந்தியா கூட்டணி" (INDIA – Indian National Development Inclusive Alliance) என அழைக்கப்பட்டது.

அவரது இந்த பங்களிப்பு பற்றி சோனியா காந்தி கூறுகையில், "முன்பு ஐக்கிய முற்போக்கு கூட்டணியை உருவாக்குவதிலும், பின்னர் "இந்தியா" கூட்டணியை உருவாக்குவதிலும், அவரது (யெச்சூரி) பங்கு மிகவும் முக்கியமானது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

2024 பொதுத் தேர்தலின் போது, யெச்சூரி நாடு முழுவதும் பயணம் செய்து தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசினார். ஏழு மொழிகள் பேசக்கூடிய அவர், தனது மொழிபெயர்ப்பாளரின் சில தவறுகளைக்கூட கூர்மையாக அவதானித்து திருத்துவதில் வல்லவர்.

அவர், கர்நாடகாவில் பாரதிய ஜனதா அற்றதொரு அரசு அமைவதற்கு முக்கிய பங்காற்றினார். அரசியல் முரண்பாடுகளைக் களைவதில் அவர் ஒரு அரசியல் ஆலோசகராக எப்பொழுதும் இருந்து வந்துள்ளார்.

எழுத்தாளராகவும், நூலாசிரியராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் திகழ்ந்த அவர், இந்தியாவின் பிதான மதமான இந்து சமயத்தின் மீது 'இந்துத்துவா' என்ற அரசியல் கருத்தியல் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது எனத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இந்தியாவின் வரலாற்றில் முதல் தடவையாக ஒரு கம்யூனிஸ்ட் மாநில அரசாங்கத்தை 1957இல் நிறுவிய ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத் (EMS Namboodiripad) அவர்களுடன் யெச்சூரி பல்வேறு சோசலிச நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

யெச்சூரி பாராளுமன்றத்தின் மேல்சபையான ராஜ்ய சபாவில் ஒரு உறுப்பினராக 2005 முதல் 2017 வரை இருந்துள்ளார்.

பிரதமர் மோடி, யெச்சூரி பற்றிக் குறிப்பிடுகையில், "அவர் ஒரு காத்திரமான பாராளுமன்றவாதி, இடதுசாரிகளின் ஒளி மிகுந்த முன்னோடி, எல்லோரையும் இணைக்கும் ஆற்றல் மிகுந்தவர்" என வர்ணிததுள்ளார்.

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# சுதந்திர பலஸ்தீனம் அமைவதே இஸ்ரேலுக்கு பாதுகாப்பு!



இஸ்ரேலுக்கும் முழு மத்தியக் கிழக்குப் பகுதிக்கும் நிலையான பாதுகாப்பு என்பது பலஸ்தீனர்களுடன் சமத்துவமான அமைதியை ஏற்படுத்துவதில்தான் உள்ளது. ஆனால் இதை ஏற்படுத்த அமெரிக்கா விரும்பவில்லை.

பெய்ரூட் மற்றும் டெஹ்ரானில் ஹிஸ்புல்லாவினதும் ஹமாஸினதும் மூத்த தலைவர்கள் மற்றும் சில ஈரானிய அதிகாரிகள் கொல்லப்பட்டதற்குப் பதிலடிதரும் விதமாக ஈரான், ஒக்ரோபர் 1 அன்று இஸ்ரேல் மீது பெரிய அளவிலான வான்வழித் தாக்குதலை நடத்தியது.

**'யூதர்களின் ஆபத்தான இடம்'**

இந்தத் தாக்குதலை எதிர்பார்த்து, தனது கூட்டாளி நாடான இஸ்ரேலைப் பாதுகாக்க, அமெரிக்கா ஏற்கனவே குறிப்பிடத்தக்க அளவில் இருந்த தனது இராணுவப் படைகளை மத்திய கிழக்கில் மேலும் அதிகரித்துள்ளது. அதன் போர்க் கப்பல்கள், இஸ்ரேலின் இராணுவத் தளங்கள் மீது ஈரான் ஏவிய ஏவுகணைகளை இடைமறித்து தடுக்க உதவின. இத்தகைய இராணுவ நடவடிக்கைகள் அமெரிக்காவுக்கு வழக்கமானதாகிவிட்டன. கடந்த பல தசாப்தங்களாக இஸ்ரேலைப் பாதுகாக்க நேரடியாகவோ மறைமுகமாகவோ அமெரிக்கா பலமுறை தலையிட்டுள்ளது.

எனினும், அமெரிக்காவின் இராணுவத் தலையீடுகள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன: அவை இஸ்ரேலை மேலும் பாதிக்கப்படக்கூடியதாக்கி, அமெரிக்க இராணுவ வலிமையை மேலும் அதிகமாகச் சார்ந்திருக்கச் செய்துள்ளன. இந்த விளைவுகள், உலகிலேயே யூதர்களுக்கு மிகவும் ஆபத்தான இடமாக இஸ்ரேலை மாற்றியுள்ளன என்பதுதான் உண்மை.

**இஸ்ரேல் எதிர்ப்பு அணியின் பலம்**

அமெரிக்க – இஸ்ரேலிய கூட்டணி இராணுவ பலத்தை மட்டுமே நம்பியிருப்பதால், இப்பகுதியில் பதற்றத்திற்கான அடிப்படைக் காரணங்களை முக்கியமாக, பலஸ்தீன – யூத இனவாத மோதலை கையாள முயற்சிக்கவில்லை. இது மத்திய கிழக்கில் புதிய வலிமைமிக்க இராணுவ அமைப்புகளையும் மக்கள் எதிர்ப்பு இயக்கங்களையும் உருவாக்கியுள்ளது. ஹிஸ்புல்லா, ஹமாஸ், அன்சார் அல்லா (Ansar Allah - ஹவுதிகளின் அமைப்பு) மற்றும் பிற குழுக்கள் இப்போது வழக்கமாக அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய இலக்குகளைத் தாக்குகின்றன.

தற்போது இஸ்ரேலை எதிர்க்கும் அணியின் வலிமை அதன் ஆயுதங்களிலிருந்து மட்டுமல்ல, அரபு பொதுமக்களின் கருத்துடன் நெருக்கமாக இணைந்திருப்பதிலிருந்தும் வருகிறது. 1973 இற்குப் பிறகு எந்த அரபு நாடும் செய்யாததை இந்த அணி செய்கிறது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பையும் அரபு மக்களை அடிமைப்படுத்துவதையும், இராணுவ ரீதியாக எதிர்க்கத் தயாரான திறன் கொண்டதாகவும் இந்த அணி உள்ளது.

பேராசிரியர் ராமி ஜி கோவ்ரி
**(Professor Rami G Khouri)**

இஸ்ரேலுக்கு அமெரிக்கா விரைவாகவும் பெரிய அளவிலும் இராணுவ ஆதரவு அளிப்பது, வன்முறைச் சுழற்சியைத் தொடரச் செய்கிறது. மேலும் இது காஸாவிலும் லெபனானிலும் பதற்றத்தைக் குறைத்து போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற அமெரிக்காவின் சொந்த வேண்டுகோள்களுக்கே முரணாகவும் உள்ளது. மத்திய கிழக்கில் உள்ள மக்களில் மிகச் சிலரே அமெரிக்காவின் வார்த்தைகளை நம்புகின்றனர். ஏனெனில் அதன் செயல்கள் – மிகச் சில விதிவிலக்குகளைத் தவிர – இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு போர், தடைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் இராணுவக் குவிப்புகள் என்பதாகவே இருந்துள்ளன.

**ஒரு பிராந்தியப் போர் உருவாகிறது**

ஒரு பிராந்தியப் போர் படிப்படியாக உருவாகி வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேலால் இதில் இழுக்கப்படவில்லை, மாறாக, தானாகவே இதில் ஈடுபட்டுள்ளது. இதற்குக் காரணம் அமெரிக்கா போரை விரும்புவதும், இஸ்ரேலுக்காகப் போருக்குச் செல்ல விரும்புவதும் ஆகும். இதற்கு மேலும் பல காரணங்கள் உள்ளன.

போர் என்பது அமெரிக்காவின் பொருளாதாரத்தை ஊக்குவிக்கிறது என்பதால் அமெரிக்கா போருக்கு ஆர்வம் காட்டுகின்றது. அமெரிக்காவின் பாதுகாப்பு வரவு செலவுத் திட்டம் இப்போது கிட்டத்தட்ட 850 பில்லியன் டொலராக உள்ளது. இது ஆண்டு தோறும் 2–3 சதவீதம் அதிகரித்து வருகின்றது. இதற்கு ஒரு காரணம் உண்டு. போர் பாதுகாப்பு செலவினங்கள் என்பவை முதலீடுகள், வேலை வாய்ப்புகள் மற்றும் நாடு முழுவதும் உள்ள நூற்றுக்கணக்கான பெரிய மற்றும் சிறிய அமெரிக்க கோர்ப்பரேட் நிறுவனங்களுக்கு இலாபங்களை அதிகரிக்கின்றது.

**அமெரிக்கா செய்யும் செலவுகள்**

இதுவரை, யேமனில் உள்ள அன்சார் அல்லாவை (ஹவுதிகளின் அமைப்பு) தாக்குவதற்காக வாஷிங்டன் 1.8 பில்லியன் முதல் 4 பில்லியன் டொலர் வரை செலவழித்துள்ளது. ஆனால் இது, காஸாவில் இஸ்ரேல் நடத்தும்

இனப்படுகொலைக்கு எதிர்ப்பாக – செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீதான ஹவுதிகளின் தாக்குதல்களை நிறுத்த இயலவில்லை.

ஏப்ரல் மாதம் இஸ்ரேலுக்கு எதிராக ஈரான் ஏவிய ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை இடைமறிப்பதற்கான இஸ்ரேல், அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் கூட்டு நடவடிக்கைக்கு 1.1 பில்லியன் டொலர் செலவானதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 1 இராணுவ பதிலடியும் அதே அளவு செலவு பிடித்திருக்கலாம். இஸ்ரேல் இனி தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள முடியாது என்பதால், சில அரபு நாடுகளும் ஈரானிய ஏவுகணைகளை இடைமறிக்க உதவின.

வாஷிங்டன் இந்தப் பெரிய தொகைகளை விருப்பத்துடன்தான் செலவிடுகின்றது. இது உலகளாவிய அந்தஸ்தை வலுப்படுத்துவதற்காகவும், உள்நாட்டுப் பயன்பாடு மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதிக்கான இலாபகரமான ஒப்பந்தங்கள் மூலம் தனது விரிவான இராணுவ–தொழில் வளாகத்திற்கு (military-industrial complex) தொடர்ந்து இலாபம் அளிப்பதற்காகவும் ஆகும்.

**பனிப்போரின் எச்சம்**

ஆயுதக் கோர்ப்பரேட் கம்பெனிகளின் இலாபவெறி தவிர, வேறு சில காரணங்களுக்காகவும் அமெரிக்கா இஸ்ரேலுக்காகப் போருக்குச் செல்ல விரும்புகிறது.

இஸ்ரேலுடனான அமெரிக்காவின் நெருக்கமான அரசியல் மற்றும் இராணுவ உறவுகள் ஓரளவு 'பனிப்போரின்' எச்சம் என்றும் சொல்லலாம். 'பனிப்போர்' என்பது, 1945 முதல் 1990 வரை சோவியத் ஒன்றியத்திற்கும் அமெரிக்கா வுக்கும் இடையில் நடந்த யுத்தமல்லாத, நீடித்த மோதல் ஆகும். அப்போது சோவியத் யூனியனுடன் கூட்டணி வைத்திருந்த நாடுகள் செல்வாக்கு செலுத்திய பகுதியில் அமெரிக்க நலன்களைப் பாதுகாக்கும் முக்கிய கூட்டாளியாக இஸ்ரேல், பார்க்கப்பட்டது. பனிப்போருக்குப் பிறகும், மத்திய கிழக்கில் அமெரிக்க ஆதிக்கத்தைப் பராமரிக்க உதவும் முதன்மைக் கூட்டாளியாக அமெரிக்கா தொடர்ந்து இஸ்ரேலைப் பார்த்தது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சமீபத்திய அமெரிக்க ஜனாதிபதிகளிடையே இஸ்ரேலின் மிகவும் உண்மையான தீவிர ஆதரவாளராக இருக்கிறார். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன: முதலாவது, இந்த நிலைப்பாட்டிலிருந்து அவர் அரசியல் ரீதியாக பயனடைகிறார். மற்றது, 1960கள் மற்றும் 70களில் இஸ்ரேலை மிக நெருக்கமான கூட்டாளி ஆக்கியதன் உச்சக்கட்ட அமெரிக்க அரசியலில் அவரது ஆரம்பகால அனுபவங்கள் அமைந்தன. இன்னும் அந்த உறவைப் பேணுகிறார் அவர்.

அமெரிக்க நாடாளுமன்றமும் இதைப் பிரதிபலிக்கிறது. இது இஸ்ரேலுக்கு தாராளமான உதவி மற்றும் சிறப்பு பொருளாதார மற்றும் தொழில்நுட்ப சலுகைகளின் தொடர்ச்சியாக அளிப்பதையும், அதன் அனைத்து எதிரிகளை விட இஸ்ரேலை அதிக சக்திவாய்ந்ததாக வைத்திருக்க சட்டப்பூர்வ உறுதிப்பாட்டையும் உறுதி செய்துள்ளது.

**அமெரிக்க ஊடகங்களின் சாய்மானம்**

அமெரிக்க பிரதான ஊடகங்கள் அமெரிக்க பொதுமக்களை பலஸ்தீன உண்மைகள் குறித்து அறியாமல் வைத்திருப்பதிலும், இஸ்ரேலுக்கும் அமெரிக்க கொடைகளுக்கும் ஆதரவு அளிப்பதிலும் முக்கிய பங்கு வகித்துள்ளன. இவை வெளிநாடுகளில் நடக்கும் அமெரிக்க இராணுவ அட்டூழியங்களை – சாகசங்களாக நியாயப்படுத்தி, பலஸ்தீனர்கள், லெபனான், ஈரான் மற்றும் பொதுவாக மத்திய கிழக்கு ஆகியவற்றுடனான மோதல்கள் குறித்த இஸ்ரேலிய நிலைப்பாடுகளுக்கு ஏற்ப தங்கள் செய்திகளை ஒருதலைப்பட்சமாகச் சாய்த்துள்ளன.

**அமைதியை விரும்பாத அமெரிக்கா**

இத்தகைய பின்னணியில் ஈரான் – இஸ்ரேல் சமீபத்திய மோதல் கடைசியானதாக இருக்காது. பிராந்திய மோதல் தீவிரமடையும்போது, அமெரிக்க படைகள் தொடர்ந்து இங்கு வந்தடைந்து, பிராந்தியத்தையும் உலகையும் நிலைகுலையச் செய்யும். கடந்த கால்நூற்றாண்டில் அமெரிக்க இராணுவவாதத்தின் இந்த விளைவு, மத்திய கிழக்கில் சுமார் 60 அமெரிக்க இராணுவத் தளங்கள் மற்றும் பிற வசதிகளை புதிதாக உருவாக்கியுள்ளது.

இந்தப்போக்கு அனைத்து தரப்பிலும் உள்ள புத்திசாலித் தலைவர்கள் பலஸ்தீனிய – இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க – ஈரானிய மோதல்களை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முயற்சிக்கும் வரை தொடரும். இந்தப் பேச்சுவார்த்தைகள் இஸ்ரேல், பலஸ்தீனம், ஈரான் மற்றும் பிற ஆர்வமுள்ள தரப்பினர் அனைவரும் நாடு, இறையாண்மை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் சம உரிமைகளை அனுபவிக்க வேண்டும் என்ற கொள்கையில் நங்கூரமிடப்பட வேண்டும். ஆனால், அமெரிக்காவும் இஸ்ரேலும் தெளிவற்ற வார்த்தைகளைப் பேசுகின்றன. தீவிர அமைதி முயற்சிகளைத் தடுக்கவும் நிரந்தர இராணுவ மோதல்களை ஊக்குவிக்கவும் செயல்படுகின்றன.

அரபு உலகின் பெரும்பான்மை மக்கள், அரபு – இஸ்ரேலிய அமைதிச் செயல்முறையின் ஒரு பகுதியாக, பலஸ்தீனர்களுக்கு இறையாண்மை மிக்க நாடு உறுதி செய்யப்பட வேண்டும் என்று வலுவாக உணர்கிறார்கள். இந்த உணர்வு அமெரிக்க பொதுமக்களிடையேயும் மெதுவாகப் பரவி வருகிறது.

உண்மையில், உண்மையான அமைதி முயற்சிகளில் முதலீடு செய்வது எளிதாகவும், நியாயமாகவும், குறைந்த செலவினமாகவும், தற்போதைய காலனித்துவ சூழ்நிலையை நிலைநிறுத்துவதை விட குறைந்த அழிவை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். இஸ்ரேலின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்துவதற்கான சிறந்த மற்றும் ஒரேயொரு வழி இதுதான்.

(கட்டுரையாளர்: பெய்ரூட் அமெரிக்க பல்கலைக்கழக பேராசிரியர்)
**நன்றி : அல் ஜசீரா**
**தமிழில்: ராகினி**

---

**3ம் பக்கத்தொடர்ச்சி...**

ஜே.வி.பி. மேற்கொண்ட அரசியல் படுகொலைகளில் அதிகமானவை இடதுசாரி கட்சித் தலைவர்கள் மீதும், தொழிற்சங்க தலைவர்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டவையாகும். (இதில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் டியு குணசேகர மீது மேற்கொண்ட 9 கொலை முயற்சிகளும் அடங்கும்)

ஜே.வி.பி. மேற்கொண்ட இது போன்ற இன்னும் பல எதிர்ப் புரட்சிகர நடவடிக்கைகள் குறித்து இந்திய கம்யூனிஸ்ட்டுகள் அறிந்திருக்காதிருப்பின், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உட்பட இலங்கையில் உள்ள உண்மையான இடதுசாரிக் கட்சிகள் மூலமாவது அறிந்து கொள்வது அவசியம்.

# சாம்சுங் தொழிலாளர் போராட்டம்



இன்னும் ஒரு தொழிற்சங்கப் பதிவைக் கூட பெற முடியாத சுதந்திரம் தான் இந்தியாவுக்கு கிடைத்துள்ளது. சாம்சுங் தொழிலாளர்களின் 38 நாட்கள் போராட்டம் முடிந்ததென அரசாங்கம் தன்னிச்சையாக அறிவித்துள்ளது. அந்நிய நாட்டு நிறுவனத்திற்கு தொழிலாளர்களை அடிமை பத்திரம் எழுதிக் கொடுக்க எதற்கு அரசாங்கம்..? ஒரு தொழிற்சங்கத்தை பதிவு செய்து அங்கீகாரம் தர முடியாத கையறு நிலையில் அரசாங்கத்தையே ஓர் அந்நிய நிறுவனம் கட்டுப்படுத்தும் என்றால், இந்தியா பெற்றது சுதந்திரம் தானா?

சுதந்திர இந்தியாவிற்குள் தமிழ்நாட்டின் ஸ்ரீபெரும்புத்தூர் தொழிற்பேட்டைக்குள் அமைந்துள்ள தென்கொரிய நாட்டைச் சேர்ந்த சாம்சுங் (Samsung) மின்னணுச் சாதன உற்பத்தி நிறுவனத்தின் தொழிலாளர்கள் கடந்த ஒரு மாதகாலமாக சட்டரீதியான உரிமைகளுக்காகச் சட்டத்திற்கு உட்பட்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

# மூன்றாண்டுகளாகத் தரப்படாமலிருக்கும் சம்பள உயர்வினைத் தர வேண்டும்

# சம்பளத்தினை வருடத்திற்கு 500 ரூபாய் அதிகரிக்க வேண்டும்

# குழந்தைப்பேறுகால தந்தைக்கான விடுமுறை நாளை மூன்றிலிருந்து ஏழு நாளாக அதிகரிக்க வேண்டும்

# சமமான தகுதியில், சமமான வேலையைச் செய்பவர்களுக்குச் சமமான சம்பளம் வழங்கப்பட வேண்டும்

# இயற்கை உபாதைகளை போக்க சுகாதாரமான கழிவறைகள் வேண்டும்.

# தங்களது சங்கத்தினை அங்கீகரிக்க வேண்டும் ஆகிய சட்டரீதியான உரிமைகளை வலியுறுத்தி அத்தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தனை போராட்டங்களுக்கு பிறகு இவற்றை பரிசீலிக்கவும், ஏற்கவும் தயாராக இருப்பதாகக் கூறுகின்ற சாம்சுங் முதலாளி, சங்கத்தினை அங்கீகரிப்பதை மட்டும் பரிசீலிக்கக் கூட முடியாது என்கிறார்.

“எனது உடல் கல்லறைக்குக் கூடச் செல்லாம். ஆனால், சாம்சுங்கிற்குள் தொழிற் சங்கத்தை மட்டும் நுழையவிட மாட்டேன்” என்றிருக்கிறார் சாம்சுங்கின் முதலாளி.

இந்தியத் தொழிலாளர் உரிமைச் சட்டங்கள் மட்டுமல்லாது, சர்வதேசத் தொழிலாளர் உரிமைச் சட்டங்களெல்லாம் இருப்பது தெரிந்துங்கூட சாம்சுங் முதலாளி இப்படிக் கூறியிருக்கிறார். அவரால் எப்படிக் கூற முடிகிறது?

சாம்சுங் முதலாளியின் பேச்சை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமானது வேடிக்கை பார்ப்பதுடன், சாம்சுங் முதலாளிக்கு ஆதரவாகவும் தொழிலாளர்களை எச்சரிக்கவும் செய்கின்றது. போராடக்கூடாதெனப் பொலிசைக் கொண்டு தொழிலாளர்களை அடித்து விரட்டுகிறது. இது ஒரு பக்கம்.

**குருசாமி மயில்வாகனன்**

இன்னொரு பக்கத்தில் தொழிலாளர்களது போராட்டத்திற்கு எதிராகப் பெரும்பான்மையான தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், மற்றும் சமூக ஊடகங்கள் இருக்கின்றன. அத்துடன் போராட்டத்தினை ஆதரிக்காத சாம்சுங் தொழிலாளர்களும் பொதுமக்களும் இருப்பதாகப் பேட்டிகள், செய்திகளை வெளியிட்டும் வருகின்றன.

இதனால், இப்போராட்டம் வெற்றியடையுமா? தோல்வியடையுமா? எனும் கேள்வி எழும்பியுள்ளது. உழைத்துச் சோறு திங்காத கூட்டமோ, இதை ஒரு கிரிக்கெட் மேட்ச் பார்ப்பதுபோலக் கருதி முகநூல், எக்ஸ் தளம், இன்ஸ்டாகிராம்களில் கொமெண்ட் அடித்து வருகிறது.

ஆனால், இப்போராட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டுமா? அல்லது தோல்வியடையச் செய்ய வேண்டுமா? எனும் கேள்வியைத் தான் நாம் இப்போது எழுப்ப வேண்டியுள்ளது. அதை எவ்வாறு முடிவு செய்வது என்பதற்காக, தொழிற்சங்கமோ, தொழிலாளர் நலச்சட்டங்களோ இல்லாத 116 ஆண்டுகளுக்கு முன்பாகச் செல்கின்றோம்.

சுதந்திரமடையாத பிரிட்டிஷ் இந்திய நாட்டின் மூன்று மாகாணங்களில் ஒன்றான சென்னை மாகாணத்தின் தூத்துக்குடியில் அமைந்திருந்த இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கோரல் மில் (Coral Mill) எனும் பஞ்சாலையின் தொழிலாளர்கள் பெப்ரவரி 27, 1908 ஆம் திகதி முதல் தங்களது முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கினர். சட்டரீதியான உரிமைகளில்லாதது அக்காலம்.

இத்தொழிலாளர்களின் கோரிக்கைகள் என்ன? ஊதியம் உயர்த்தப்பட வேண்டும் வாரம் ஒருநாள் விடுமுறை விடப்பட வேண்டும். கூலியில்லாமல் விடுப்பு எடுக்கும் முறை வேண்டும்

இவைகளெல்லாம மிக எளிமையான கோரிக்கைகள் தான், ஆனால் அக்காலத்தில் இவைகள் மிகப்பெருங் கோரிக்கைகளாக இருந்தன.

அதுவரையிலும் போராட்டம் என்றால், என்னவென்றே தெரிந்திராத கோரல் மில் தொழிலாளர்களுக்குப் போராட வேண்டும் எனும் எண்ணம் எப்படி வந்தது? அதற்குக் காரணம் இருவர்.

ஒருவர், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்கு எதிராக,

சுதேசிக் கப்பல் கம்பெனியை (ஒக்ரோபர் 16, 1906)த் தொடங்கி சுதேசிக் கப்பல்களைக் கொண்டு வந்து தூத்துக்குடிக் கடலிலே நிறுத்தி இலங்கைக்கும் தூத்துக்குடிக்குமான கப்பல் போக்குவரத்தை நடத்திக் காட்டி, காலனியாதிக்க எதிர்ப்பின் பீரங்கியாகத் திகழ்ந்த வக்கீல் வ.உ.சிதம்பரனார்.

இன்னொருவர், ரஷ்யப் புரட்சி மக்களுக்கு நன்மையை விளைவித்தது. புரட்சிகள் எப்போதும் மக்களுக்கு நன்மையைத் தான் கொண்டு வரும் என முழங்கிய வத்தலக்குண்டு வீரர் சுப்பிரமணிய சிவா.

தூத்துக்குடியில் சுதேசிப் பிரச்சாரம் அனல் பரத்திக் கொண்டிருந்த நேரம். "நான் ஆலை நிர்வாகத்திடம் எச்சரிக்கை செய்து பார்க்கிறேன், அதுவரை சற்றுப் பொறுங்கள்" என வ.உ.சி தொழிலாளர்களிடம் ஆறுதல் சொல்லியிருந்தார். இருந்தபோதிலும் ஆலை நிர்வாகத்தின் கொடுமைகளைப் பொறுக்க முடியாமலிருந்த தொழிலாளர்கள், வ.உ.சி மற்றும் சிவாவின் சுதேசிப் பேச்சுக்களால் உத்வேகம் பெற்றதால் வேலை நிறுத்தத்தை அவர்களாகவே அறிவித்துவிட்டனர்.

தொழிலாளர்களின் துயர நிலையை உணர்ந்த வ.உ.சி களத்தில் இறங்கினார். போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் தனது சொந்தப் பணத்தைக் கொண்டும் சுதேசப் போராட்ட நிதியினைத் திரட்டியும் உணவளிக்க ஏற்பாடு செய்தார். தொழிலாளர்களுக்கு உதவுமாறு மக்களிடம் கோரினார். வேலையற்றிருந்த தொழிலாளர்களுக்கு வேறு இடங்களில் வேலைகளுக்கு ஏற்பாடு செய்தார்.

அப்போது, ரஷ்ய ஜார் மன்னனின் பிரிட்டிஷ் இந்தியத் தூதராக இருந்த செர்க்கின் என்பவர், "இது திறம்பட நடத்தப்படும் வேலை நிறுத்தம் ஆகும். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு உணவு படைக்க வேலை நிறுத்தத்தை நடத்தும் தலைவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்" எனத் தந்தியடித்திருக்கிறார்.

தொழிலாளர்கள் கோரிக்கைகளை வைக்கும்போது ஆலைகளை மூடினால் நாலு நாளில் பசிபொறுக்க முடியாமல் ஓடி வந்து காலில் விழுவார்கள் என முதலாளிகள் கனவு கண்டிருந்த காலத்தில் அவர்களின் நினைப்பில் பெரியவர் மண்ணள்ளிப் போடுவார் என எவனும் கனவுகூடக் கண்டிருக்க மாட்டான்.

பெப்ரவரி 27, 1908 அன்று வேலை நிறுத்தம் தொடங்கியது. அப்போது கலெக்டராக இருந்த பிரேக்கன் என்பவனால் வ.உ.சி தலைமையிலான சுதேசிகளை ஒடுக்க முடியவில்லை என்பதால் ஆஷ் என்பவனை உதவிக் கலெக்டராக நியமித்தது பிரிட்டிஷ் அரசு.

மார்ச் 2, 1908 அன்று ஆஷ் வ.உ.சிதம்பரம் பிள்ளையும் சந்திக்கின்றனர். 'நன்றாக நடந்து கொண்டிருந்த ஆலையை வேலை நிறுத்தத்தைத் தூண்டி நீ நாசம் செய்கிறாய்' என்கிறான் ஆஷ்.

"இல்லை, பல கொடுமைகளைத் தொடர்ச்சியாகச் செய்து தொழிலாளர்களைத் துன்பப்பட வைத்ததினால் தான் அவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்" எனப் பதில் சொல்கிறார் வ.உ.சி.

போராட்டம் தொடங்கியபோது. வ.உ.சி சொன்னது, "அவர்களுக்கு ஆதரவளிப்பது எனது கடமையென உணர்ந்தேன்". 06.03.1908 அன்று காலையில் ஆலையின் ஏஜெண்டான மில்லாபீஸ் பிள்ளை என்றழைக்கப்பட்ட சுப்பிரமணியபிள்ளை வ.உ.சியைச் சந்திக்கிறார்.

அரைப்பங்கு கூலியைக் கூட்டுதல், கூலியுடன் ஞாயிற்றுக் கிழமை விடுமுறை விடுதல், தேவைப்பட்டால் கூலியின்றி விடுப்பு எடுத்தல் ஆகிய மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றினால் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புவார்கள் என அவரிடம் வ.உ.சி. சொல்கிறார். அன்று மாலை எவ்வித நிபந்தனைகளுமில்லாமல் கோரிக்கைகளை ஏற்பதாக ஆலை நிர்வாகம் அறிவிக்கிறது. போராட்டம் வெற்றியடைந்து விட்டது.

அன்று மாலை தொழிலாளர்களிடம் பேசுகிறார் பெரியவர், "எனது நோக்கம் அவர்களது ஆணவத்தைக் குறைப்பதேயாகும். தொழிலாளர்கள் ஒரு வாரம் சும்மா இருந்தார்கள். இப்போது நல்ல கூலி பெறப் போகிறார்கள். 50% உயர்வு சுதேசியத்தால் கிடைத்திருக்கிறது. நாம் வெள்ளையர்களை எதிர்த்து நின்று வெற்றி பெற்றுள்ளோம். இந்நாளானது எனக்கும் உங்களுக்கும் பெருமைக்குரிய நாளாகும்."

சுதேசிப் பிரசங்கங்களிலே வ.உ.சி பேசிய விசயங்களில் தொழிலாளர் சார்ந்த இரண்டு விசயங்கள் மிக முக்கியமானவை. இன்று போராடிக் கொண்டிருக்கின்ற சாம்சுங் நிறுவனத் தொழிலாளர்களும் அவர்களுக்காகப் போராடுகின்ற சங்கங்களும் அதைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

1908 பெப்ரவரி 26 இல் கோரல் மில் தொழிலாளர்களிடம் பேசும்போது ஆலை முதலாளிகளை முடக்குவதற்கு இரண்டு வழிகள் உள்ளதென்றும், ஒன்று, மில்லிலுள்ள இயந்திரங்களை சேதப்படுத்துவது. மற்றொன்று, வேலை நிறுத்தம் செய்வது. இதில் இரண்டாவது வழியைத் தொழிலாளர்கள் கையாள வேண்டும் என சுப்பிரமணிய சிவா பேசிய பிறகு பேசிய வ.உ.சி, இரண்டு வழிமுறைகளையுமே கையாள வேண்டுமென்று பேசியிருக்கிறார். இயந்திரங்களைச் சேதப்படுத்தலாம் என வ.உ.சி பேசியதின் பொருள் என்ன?. அதை மற்றுமொருரிடத்தில் வ.உ.சி பேசியதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

"அடுத்து பருத்தி வணிகம். அதை நாம் கைப்பற்றுவது மிக எளிது. இத்தொழிலை நடத்துவதற்குத் தேவையான உழைப்பாளர்களையும், மூலதனத்தில் கால்பகுதியையும், வழங்கத் தூத்துக்குடி மக்கள் முன்வருவார்களானால், மீதமுள்ள முக்கால் பகுதி மூலதனத்தை முதலீடு செய்வதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாக மதுரையிலிருந்தும், சேலத்திலிருந்தும் பலர் எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். இந்நகரப் பெருமக்களாகிய நீங்கள் எனக்கு உதவி புரிவீர்களானால் நான் இங்கு ஒரு பெரிய பஞ்சாலையை நிறுவி, நூலையும் எல்லாவகைத் துணிகளையும் தயாரிக்கத் தொடங்கி விடுவேன். சுதேசிக் கப்பல் நிறுவனம் உறுதியான அடிப்படையில் நிறுவப்பட்டிருப்பதைப்போல், ஒரு பஞ்சாலையையும் வெற்றிகரமாக உருவாக்கி விடலாம்."

இதிலிருந்து சுதேசக் கப்பல் கம்பெனிக்கு அடுத்து, வ.உ.சியின் அடுத்த இலக்கு ஒரு சுதேசப் பஞ்சாலையை நிறுவுதல் என்பதைப் புரிந்து கொள்ளலாம். சுதேசியத் தொழில்கள் தான் நாட்டிற்கு வேண்டும் என்பதைத் தான் தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

# காட் (General Agreement on Tariffs and Trade - GATT) – டங்கல் (Dunkel) ஒப்பந்தத்தில் உடன்பாடு செய்து

கொண்டு கையெழுத்திட்டுள்ள ஒரு நாட்டில்,

# சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குள் இந்தியத் தொழிற்சாலைச் சட்டங்கள், இந்தியத் தொழிலாளர் உரிமைச் சட்டங்கள், தொழிற் தகராறு வழக்குகளில் இந்திய நீதிமன்றங்களினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புகள், இந்தியன் பீனல் கோடு உள்ளிட்ட அவ்வளவும் செல்லாது என அடிமைத்தனத்தை ஏற்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்துள்ள நாட்டில்,

# பொதுத்துறைகளைத் தனியார்களிடம் விற்பதற்கென்று ஒரு அமைச்சகத்தையே உருவாக்கி நடத்திக் கொண்டிருக்கும் நாட்டில்,

அதன் அரசுகள் தொழிலாளர்கள் சார்பாக நிற்பார்கள் எனக் கனவிலும் நாம் நினைக்க முடியுமா?

இன்றைய சாம்சுங் தொழிலாளர் போரட்டம் வெற்றியாகவோ அல்லது தோல்வியாகவோ முடியலாம். ஆனால் நாளை?. அன்று நோக்கியா, அதன்பின் மாருதி, இன்று சாம்சுங். இது ஒரு தொடர்கதை. இதை நீங்கள் எப்படி எதிர் கொள்வீர்கள்?.

சுதேசத் தொழில்கள் திட்டமிட்டு நசுக்கப்படும் ஒரு நாட்டில், பன்னாட்டுத் தொழில்களால் கொள்ளையடிக்கப்படுகின்ற ஒரு நாட்டில் தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் என்ன செய்ய வேண்டும்?

மெய்யறம் எனும் தனது நூலில் தொழில் அறிதல் எனும் பகுதியில் என்ன செய்யவேண்டும் என்பதைப் பெரியவர் வ.உ.சிதம்பரனார் தெளிவாகச் சொல்கிறார்.

“படைக்கலமனைத்தும் பண்பொடு பயில்க,
படைவகுத்தமர் செயு நடையெலாமறிக”

ஓம், இது ஏதோ பஞ்சப்படி உயர்வுப் போராட்டத்திற்கான தீர்வல்ல. நாட்டின் தொழில் துறைகளைக் காப்பாற்றுவதற்கான தீர்வு. இது இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, எந்த நாட்டிற்கும் இதுதான். இது ஒன்றே தீர்வு, இதைத்தவிர வேறு ஏதும் தீர்வில்லை. போராட்டம் வெல்லட்டும்! வ.உ.சி வழி நடப்போம்!!

(குருசாமி மயில்வாகனன், செயலாளர், வ.உ.சி ஆய்வு வட்டம் தமிழ்நாடு)

# சஹாரா பாலைவனத்தில் 50 ஆண்டுகளில் இல்லாத வகையில் மழை, வெள்ளம்



சஹாரா பாலைவனத்தில் மழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் சஹாரா பாலைவனப் பகுதியில் வெள்ளம் ஏற்படுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆபிரிக்க கண்டத்தில் மொராக்கோவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள சஹாரா பாலைவனம் தான் உலகின் மிகவும் வறண்ட பாலைவனமாக அறியப்படுகிறது. பல கொடிய விஷம் மிகுந்த ஊர்வன உயிரினங்களைக் கொண்டது இப்பாலைவனம். சஹாரா பாலைவனம், வடக்கு, மத்திய மற்றும் மேற்கு ஆப்பிரிக்கா முழுவதும் 94 இலட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது.

சஹாராவில் மழை வெள்ளம் என்பது அரிதினும் அரிது. அந்த வகையில் அண்மையில் அங்கு பெய்த திடீர் மழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது, ஓராண்டில் பெய்ய வேண்டிய மழை ஓரிரு நாட்களில் பெய்ததால் சஹாரா பாலைவனத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இந்த திடீர் கனமழையால் சஹாரா பாலைவனத்தில் ஜகோரா – டாடா (Zagora - Tata) மணல் படுக்கைகளுக்கு இடையே உள்ள இரிக்கி (Iriqui) என்ற வறண்ட ஏரியில் நீர் நிரம்பியுள்ளது.

இது குறித்து மொராக்கோ நாட்டு வானிலை ஆய்வு மைய அதிகாரி ஹூசின் யூபெப் (Houssine Youabeb) கூறியிருப்பதாவது: “மிகக் குறைவான நேரத்தில் அதிகளவு மழை பெய்து 30 முதல் 50 ஆண்டுகள் ஆகிவிட்டது. தலைநகர் ரபாத்திலில் (Rabat) இருந்து 450 கிமீ தொலைவில் உள்ள டாகோயுனைட் (Tagounite) கிராமத்தில் பெய்த கனமழையால் இந்த வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இங்கு 24 மணி நேரத்தில் 100 மி.மீ மழைப்பொழிவு பதிவாகியுள்ளது” எனத் தெரிவித்துள்ளார்.

புவி வேகமாக வெப்பமடைதல் காரணமாக வானிலையில் திடீரென மாறுபாடு ஏற்படுகிறது. எதிர்காலத்தில் இது போன்ற பிரச்சனைகள் இப்பகுதியில் அடிக்கடி நிகழக்கூடும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

ஏற்கனவே கடந்த செப்டம்பர் மாதமும் டகோயுனைட் கிராமத்தில் 24 மணி நேரத்தில் 100 மிமீ மழை பதிவாகியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலக வானிலை அமைப்பின் பொதுச்செயலாளர் செலஸ்டி சாலோ (Celeste Saulo) கூறுகையில், “உலகம் முழுவதும் தண்ணீர் சுழற்சி அதிவேக சீற்றமாக மாறிக் கொண்டிருக்கிறது. அதாவது, இப்பகுதியில் நிலவும் காற்றில் வழக்கத்தைவிட ஈரப்பதம் அதிகமாக உள்ளது. இதன் வேகம் ஒரு சீராக இல்லாததால் ஒரு கணிப்பிற்கு வர முடியவில்லை. இருப்பினும் வேகமாக அதிகரிக்கும் வெப்பம், அல்லது வேகமாகக் குறையும் வெப்பத்தால் வரும் பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகிறோம்” என்றார்.

பாலைவனத்தில் ஆங்காங்கே இருக்கும் ஈச்ச மரங்களை சூழ்ந்துள்ள மழை வெள்ளக் காட்சிகள் அடங்கிய புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. கடந்த 50 ஆண்டுகளில் சஹாரா பாலைவனப் பகுதியில் வெள்ளம் ஏற்படுவது இதுவே முதல்முறை என்பதால், இந்தப் படங்கள் ஊடகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளன.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

ஒரு சிறிய கட்சியான ஜே.வி.பி. கட்சியை ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற வைத்துள்ளனர்.

இதிலிருந்து சிங்கள மக்கள் தமக்குத் தேவையான நேரங்களில் அரசியல் மாற்றங்களைச் செய்து வந்ததை அவதானிக்க முடிகிறது. ஆனால் தமிழ் மற்றும் முஸ்லீம் சமூகங்களைப் பொறுத்தவரையில், அவர்கள் சிங்கள மக்கள் செய்யும் இம் மாற்றங்களிலிருந்து ஒதுங்கி இருந்து வந்ததையே வரலாறு எடுத்துக் கூறுகின்றது.

இத்தகைய ஒரு நிலைமைதான் சிறுபான்மை சமூகங்கள் இலங்கையில் பலவீனமடைந்து செல்வதற்கான காரணியோ என எண்ணத் தூண்டுகிறது. அதாவது, சிறுபான்மை சமூகங்கள் பலவீனமடைந்து வருவதற்கு இரண்டு வகையான காரணிகள் இருப்பது போலத் தோன்றுகிறது.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் வடக்கு கிழக்கில் வாழ்ந்த தமிழர்கள் தமது இன அடையாளத்துடன் தனியாகவே செயல்பட்டு வந்துள்ளனர். அதற்கு ஒரு வகையில் ஆட்சியில் இருந்த அரசுகளின் சிங்கள பேரினவாத செயல்பாடுகளும் காரணம்.

ஆனால், முஸ்லீம் தலைமைகள் மிக நீண்ட காலம் பெரும்பான்மை சிங்கள கட்சிகளுடனேயே – குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் ~ இணைந்து செயல்பட்டு வந்தன. அதற்குக் காரணம், அந்த தலைமைகளில் பெரும்பாலானவை தென்னிலங்கையில் தமது வர்த்தக நடவடிக்கைகளை வைத்திருந்தமையே. ஆனால், பெரும்பான்மையான முஸ்லீம்கள் கிழக்கிலும் மேற்கிலும் வேரூன்றியிருந்ததால், அந்த மக்களின் நலன் கருதி, கிழக்கைச் சேர்ந்த அஸ்ரப் முஸ்லீம் மக்களுக்கென தனித்துவமான அரசியல் கட்சியான சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசைத் தோற்றுவித்தார். இருந்தாலும், அவரும் தென்னிலங்கை கட்சிகளுடனேயே தனது அரசியல் நடவடிக்கைகளை கூட்டு வைத்துச் செயற்பட்டார்.

மலையகத்தைப் பொறுத்தவரை, சௌமியமூர்த்தி தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனித்துவமிக்க ஒரு தொழிற்சங்க – அரசியல் இயக்கமாக பரிணமித்திருந்த போதும், அவரும் மலையகத்தின் பிரத்தியேக சூழ்நிலைகள் கருதி தென்னிலங்கை அரசியல் கட்சிகளுடன் கூட்டு வைத்தே செயற்பட்டார்.

இருந்தபோதும், இந்த சிறுபான்மை சமூகங்களால் சிங்களப் பேரினவாதத்தின் புறக்கணப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முடியவில்லை.

இந்த சிறுபான்மை சமூகங்கள் தமது தனித்துவத்தையும், உரிமைகளையும் பாதுகாப்பதற்காக தனித்து நின்று செயற்படுவதில் தவறு இல்லை. ஆனால், இலங்கையின் பெரும்பான்மை குடிமக்களான சிங்கள மக்கள் மாற்றங்களைச் செய்யும் போது அதற்கெதிரான நிலைப்பாட்டை எடுப்பது தவறானது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

உதாரணமாக, 1956 இல் பதவிக்கு வந்த பண்டாரநாயக்க அரசாங்கமும், அதன் பின்னர் 60கள் 70களில் ஆட்சிக்கு வந்த அவரது மனைவி சிறீமாவோவின் அரசாங்கங்களும் பல்வேறு விதமான ஏகாதிபத்திய எதிர்ப்பு முற்போக்கு நடவடிக்கைகளை எடுத்தன. அவற்றுள் முக்கியமாக, ஏற்றுமதி ~ இறக்குமதி வர்த்தகத் தேசியமயம், வங்கிகள் காப்புறுதி நிறுவனங்கள் தேசியமயம், துறைமுகம் தேசியமயம், தோட்டங்கள் தேசியமயம், பாடசாலைகள் தேசியமயம், போக்குவரத்து தேசியமயம், நெற்காணி மசோதா, காணி சீர்திருத்தச் சட்டம் போன்றவை குறிப்பிடத்தக்கன.

ஆனால், இந்த தேசபக்த நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழ் மக்களைப் பிரதிநித்துவப்படுத்திய தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் எதிர்த்தே வந்துள்ளன. அதன் காரணமாக, தமிழர்கள் என்றால், நாட்டுக்கு எதிரானவர்கள், ஏகாதிபத்தியத்துக்குச் சார்பானவர்கள் என்ற கருத்து சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட ஏதுவாயிற்று. அந்த நிலை இன்றுவரை தொடர்கிறது.

அதனால்தான், சிங்கள மக்கள் தமக்குத் தேவையான நேரத்தில் மாற்றங்களைச் செய்யும் போது தமிழர்கள் மாற்றங்கள் எதுவும் இன்றி தேங்கிய குட்டையாக அழுகிப்போய் இருக்கிறார்கள்.

சிங்கள மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியையும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியையும் இடதுசாரிக் கட்சிகளையும் மட்டும் தொடர்ந்து ஆதரித்துக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் நாட்டினதும் உலகத்தினதும் மாற்றங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து தோன்றிய ஐக்கிய மக்கள் சக்தியையும், அதேபோல சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து தோன்றிய சிறீலங்கா பொதுஜன பெரமுனவையும் கூட ஆதரித்தார்கள். இன்று தமது தேவை கருதி அந்த பாரம்பரிய பிரதான கட்சிகளை ஒதுக்கிவிட்டு, ஜே.வி.பி. என்ற இன்னொரு கட்சியைத் தேர்வு செய்துள்ளார்கள்.

ஆனால் தமிழர்களோ, இன்னமும் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளையே இறுகக் கட்டிப்பிடித்த வண்ணம் உள்ளனர். அந்த நிலையில் அடிப்படையான மாற்றம் வராதவரை, தமிழ் சமூகம் மேலும் மேலும் பலவீனமடைந்தே செல்லும். அதற்கு உதாரணமாக, ஒரு பக்கத்தில் தமிழ் கட்சிகளில் பதவிப்போட்டி காரணமாக ஏற்பட்டு வரும் உடைவுகளைக் காண முடிகிறது. மறுபக்கத்தில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பிரதான கட்சிகளின் வேட்பாளர் பட்டியல்களிலும், தேசியப் பட்டியல்களிலும் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்களின் பெயர்கள் அரிதாக இருப்பதையும் காண முடிகிறது.

இலங்கையில் சிறுபான்மையின சமூகங்களின் நிலைமை இவ்வாறு பலவீனமாகிக்கொண்டு போவதற்கு சிங்கள பேரினவாதத்தின் திட்டமிட்ட நடவடிக்கைகள் மட்டும் காரணமல்ல. சிறுபான்மை சமூகங்கள் தமக்கிடையே காலத்துக்கு ஏற்ற மாற்றங்களைச் செய்யாமையும் ஒரு பிரதான காரணம். சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த இளைய சமுதாயம் இதுபற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

---

**9ம் பக்கத்தொடர்ச்சி...**

காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்யுன் கார்கே (Mallikarjun Kharge), யெச்சூரி பற்றிக் குறிப்பிடுகையில், “அவரது இழப்பு தாராண்மைவாதிகளுக்கு ஒரு பேரிழப்பு, அவர் முற்போக்கு சக்திகளின் உணர்வுகளின் பாதுகாவலர்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

(இந்த கட்டுரையாளர் Saritha S Balan கேரள தலைநகர் திருவனந்தபுரத்தை தளமாகக் கொண்டு செயற்படும் ஒரு சுதந்திர ஊடகவியலாளர் ஆகும். அவரது கட்டுரையின் முக்கியமான பகுதிகளே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இந்தக் கட்டுரை Russia Today ஆங்கில இணையத்தளத்தில் வெளிவந்ததாகும்)

# ஊகங்களுக்குக் கொடுக்கப்பட்ட விலை



அஞ்சலி: ஜி.என்.சாய்பாபா (1967 – 2024)

“நாட்டுக்கு ஆபத்து என்கிற ஊகங்களுக்காகச் சட்டத்தின் செயல்பாடுகளைப் பலி கொடுக்க முடியாது” என அதிகார வர்க்கத்துக்கு அறிவுறுத்திவிட்டுத்தான், சமூகச் செயல்பாட்டாளரான பேராசிரியர் ஜி.என்.சாய்பாபாவை உச்ச நீதிமன்றம் சில மாதங்களுக்கு முன்னர் விடுதலை செய்தது. ஏழு ஆண்டுகள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாய்பாபா அப்படித்தான் விடுதலையானார். பல்வேறு உடல்நலச் சிக்கல்களுக்கு ஆட்பட்டாலும் சமூகப் போராளி என்னும் நிலையிலிருந்து சிறிதும் பின்வாங்காத சாய்பாபா, கடந்த ஒக்ரோபர் 12 அன்று காலமானார்.

சாய்பாபா இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் உள்ள அமலாபுரம் என்னும் ஊரில் பிறந்து வளர்ந்தவர். இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்டதால், கைகளைத் தரையில் ஊன்றித்தான் இவரால் நகர முடியும் பிற்காலத்தில் சக்கர நாற்காலியின் உதவியோடு நடமாடினார். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்த வலியுறுத்தல் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் உயர் கல்வி பயிலும் காலத்திலிருந்தே இவர் ஈடுபட்டுவந்தார். பின்னர் டெல்லி பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியர் ஆனார்.

பட்டியல் சாதியினர், பழங்குடியினர், சிறைவாசிகள் போன்றோரின் உரிமைகள், இடஒதுக்கீட்டுக்கான ஆதரவு எனப் பல திசைகளில் சாய்பாபாவின் போராட்டங்கள் அமைந்தன. ஆந்திராவைச் சேர்ந்தவராக இருப்பினும், தெலங்கானா தனி மாநிலக் கோரிக்கையை ஆதரித்தார். நில ஆக்கிரமிப்பு, சட்ட விரோதக் கனிமச் சுரங்கங்கள் போன்ற முறைகேடுகளுக்கு எதிராகவும் இவரது குரல் ஒலித்தது.

சாய்பாபாவின் நண்பர்களும் குடும்பத்தினரும் அஞ்சியபடியே, 2014 இல் அரசு நடவடிக்கைக்கு அவர் உள்ளாக்கப்பட்டார். அவர் உள்பட ஆறு பேர், மாவோயிஸ்ட்டுகளுடன் சேர்ந்து தேசத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக மகாராஷ்டிரா அரசால் குற்றஞ்சாட்டப்பட்டனர் சட்டவிரோதச் செயல்பாடுகள் தடுப்புச்சட்டம், இந்தியத் தண்டனைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்பட்டு, நாக்பூர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து சில ஆண்டுகள் சிறையும் பிணையுமாக சாய்பாபாவின் வாழ்க்கை கழிந்தது. மார்ச் 7, 2017 இல் கட்சிரோலி (Gadchiroli) அமர்வு நீதிமன்றம் அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது. மிகக் கொடுமையான, தொடர்ச்சியான சிறை வாழ்க்கையை அவர் அனுபவிக்க நேர்ந்தது. மாற்றுத்திறனாளியான அவர், கண்ணியமான முறையில் இயற்கை உபாதைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூட அனுமதிக்கப்படவில்லை என விமர்சிக்கப்படுகிறது.

தொடர்ந்து நடைபெற்ற வழக்கில், சாய்பாபா உள்ளிட்டோர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை எனக் கூறி, 2022 இல் மும்பை உயர் நீதிமன்றம் அவரை விடுவித்தது. இதை எதிர்த்து மகாராஷ்டிர அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த நிலையில், சாய்பாபாவுக்கு எதிரான ஆதாரங்கள் போதுமானதாக இல்லை எனத் தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்றம், 2024 மார்ச் 5ந் திகதி அவர் உள்பட அனைவரையும் 10 வருடங்கனின் பின்னர் விடுவித்தது.

சிறையில் இருந்த காலத்தில் சாய்பாபா 27 முறை மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டபோதிலும், அவரது நிரந்தர போலியோ பக்கவாதம் நோய்க்குக்கூட, மருந்து கொடுக்க அதிகாரிகள் மறுத்துள்ளனர். பல்வேறு உடல்நலக் கோளாறுகளுடன் வெளியே வந்த சாய்பாபா பித்தப்பை கோளாறு சிகிச்சைக்காக ஹைதராபாத் நிசாமின் மருத்துவமனையில் இறப்பதற்கு பத்து நாட்களுக்கு முன்னர் சேர்க்கப்பட்டார். அங்கு அறுவைசிகிச்சை செய்யப்பட்ட சில நாள்களில் மாரடைப்பால் அவர் மரணம் அடைந்தார்.

சாய்பாபா – வசந்தகுமாரி தம்பதிக்கு ஒரு மகள் இருக்கிறார். விடுதலைக்குப் பின், சாய்பாபா குடும்பத்தினருடன் நேரம் செலவிட விரும்பினார். அவர் சிறையில் இருந்த காலத்தில், அவரது தாய் இறந்தார். தாயின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளக்கூட சாய்பாபா அனுமதிக்கப்படவில்லை. இறப்புக்குப் பின் தனது பூதவுடலை மருத்துவக் கல்லூரிக்கு அளிக்க வேண்டும் என்கிற அவரது இன்னொரு விருப்பம் குடும்பத்தினரால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிறை நாள்களில் அவர் எழுதிய நூலின் தலைப்பு, ‘என் வழியைக் கண்டு ஏன் இவ்வளவு அஞ்சுகிறீர்கள்?’. எளிய மனிதர்களின் பிரதிநிதியாக விளங்கிய சாய்பாபாவுக்கு இழைக்கப்பட்ட கொடுமை, அவர் மீது அதிகார வர்க்கம் கொண்டுள்ள அச்சத்தின் வெளிப்பாடு என்றே கூறலாம்.

–ஆனந்தன்